© உரிமை பதிவுபெற்றது

!

Price Rs. 16/-

அச்சிட்டோர் :
மெர்குரி பிரிண்டர்ஸ்
சென்னை - 4

H9647

ஸ்ரீவித்யாஸ்தவமஞ்ஜரீ - 2

श्रीमहामाहेश्वराचार्यपृथ्वीधरभट्टारकविरचितः
श्रीलघुसप्तदशीस्तवराजः

ஸ்ரீமஹாமாஹேச்வராசார்யப்ருத்வீதரபட்டாரகவிரசித:
ஸ்ரீலகுஸப்ததசீஸ்தவராஜ:

தமிழ் அநுவாதம் — ஆக்கியோன்
பண்டித வாதூல ராமசந்த்ரசர்மா



ஸ்ரீ வித்யாஸமிதி வெளியீடு
4, ஸ்ரீராம் காலனி, அடையாறு, சென்னை.

Scanned by CamScanner

—: பொருளடக்கம் :—

	முன்னுரை	
	ஸமர்ப்பணம்	
	ஸ்ரீமுகம்	
	தோற்றுவாய்	
	நியாஸங்களுடைய விளக்கம்	1 - 48
	லகுஸப்ததசிஸ்தவராஜம்	49
(1)	அநுபந்தம்	i
(2)	,,	i - ii
(3)	,,	ii - vi
(4)	,,	vi - xi
(5)	,,	xiii
(6)	,,	xiv - xv
(7)	,,	xv - xvi
(8)	,,	xvi - xix
(9)	,,	xix - xxvii

பிழைத்திருத்தம்

பக்கம்	வரி		பக்கம்	வரி	
1	1	वामाङ्क	25	23	ஸப்ததசீ
12	8	नमोऽस्तु	31	15	इष्टदा
14	19	न्यासविधि:	31	26	निर्माण
20	16	வ்யவஹாரம்	41	8	கல்பத்தில்
21	19	சாந்தி	57	15	रूपेण
21	25	दीप्यते	78	22	தஸ்மித்

முன்னுரை

'ஸ்ரீலகுஸப்ததசி' என்ற இச்சிறு துதியானது இன்றைக்கு ஆயிரத்து நூறு ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்து வந்த மஹாமாஹேச்வராசார்யரான ஸ்ரீப்ருத்வீதரபட்டாரகர் இயற்றியது. இந்நூல் ஸ்ரீதேவீமாஹாத்ம்யத்தினுடைய ஸாரவடிவாயமைந்தது. தினந்தோறும் தொண்டர்கள் பாராயணம் செய்வதற்குரியது. விசேஷமாயுள்ள அங்கந்யாஸங்களுடைய விரிவாயுள்ள விளக்கம் பெற்றுள்ளது. இத்துதியின் தனிச்சிறப்பாகும். இந்நூல் மலையாள லிபியில் ஒரே சுவடிதான் கிடைத்தது. எனவே இந்நூலுக்கு அதைத் தழுவி எளிய நடையில் ஓர் தமிழ் அநுவாதமும் வரைந்து வாசகர்களாம் தொண்டர்களுக்கு வழங்கப் பெறுகின்றது.

இதை நல்ல முறையிலே அச்சிட்டுக் கொடுத்தவரான 'மெர்குரி' அச்சகத்தின் தலைவர் நண்பர் ஸ்ரீராவ் அவர்களுக்கும் எனது ஹ்ருதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஸித்தாச்ரமம்.
அடையாறு.

இங்ஙனம்
வாதூல. வே. ராமசந்திரசர்மா

ஸமர்ப்பணம்

ஆத்ம வித்யையைப் புகட்டி, அறிவை வளரச் செய்து, ஸ்ரீவித்யாவிஷயங்களுடைய ரஹஸ்யத்தையுபதேசித்து, ஆத்மநெறியிலே என்னை நிற்கச் செய்த எனது ஸ்ரீகுருநாதருடைய திருச்சரணங்களில் இச்சிறு நூல் ஸமர்ப்பணம் செய்யப் பெறுகின்றது.

श्रीः

श्रीचन्द्रमौलीश्वर

मुद्रा

श्रीमत्परमहंसपरिकाचार्यवर्यश्रीकाञ्ची-
कमकोटिपीठाधिपजगद्गुरुवर्य-
श्रीमच्चन्द्रशेखरेन्द्रश्रीपादादेशानु-
सारेण श्रीमज्जयेन्द्रसरस्वती-
श्रीपादैःश्रीवाधूलरामचन्द्र-
शर्मणे क्रियते नारायणस्मृतिः

श्रीदेवीविषकानां श्रीदुर्गासप्तशत्यानेद्यकग्रन्थानां स्वीयद्राविडभाषानुवादप्रकाशनेन प्रसिद्धिमुपेयुषा भवता प्रकाशितः श्रीपृथ्वीधरभट्टारकविरचितः श्रीलघुसप्तदशीस्तवराजः मन्त्रस्वरूपदुर्गासप्तशतीसारगर्भितः अष्टादशश्लोकैः श्रीदेवीं स्तौति ।

अस्य न्याससहितस्य स्तवस्य भवता कृतः द्राविडयनुवादः मूलार्थं पदतात्पर्यार्थविवरणपूर्वकं सम्यक् विशदयति । आस्तिकाः एतत्स्तुतेः अनुवादयुतायाः पठनेन महिमानवगत्य देवीम् आराधयन्तः तस्याः प्रसादेन सर्वाण्यपि मङ्गलानि अवाप्नुयुरिति । भवांश्च अन्यान्यपि एतादृशग्रन्थान् अर्थविवरणपूर्वकं प्रकाशयन् ऐहिकामुष्मिकफलानि प्राप्नुयादिति आशास्महे ।

यात्रास्थानम्, कोकादनगरम्
कर्णाटकप्रदेशः, सिद्धार्थमार्ग-
शीर्षशुद्धसप्तमी ।

नारायणस्मृतिः

Scanned by CamScanner

ஸ்ரீ:

ஸ்ரீசந்த்ரமௌலீச்வர

முத்திரை

ஸ்ரீமத்பரமஹம்ஸபரிவ்ராஜகாசார்ய
வர்யஸ்ரீமத்சங்கரபகவத்பாதர்அவர்
களால் ப்ரதிஷ்டைசெய்யப்பெற்ற
ஸ்ரீகாஞ்சிகாமகோடிபீடத்தினுடைய
அதிபர்களானஸ்ரீஜகத்குருஸ்ரீமத்
சந்த்ரசேகரேந்த்ரஸரஸ்வதீஸ்ரீபாதா
ளுடையஆஜ்ஞானுஸாரேணஸ்ரீமத்
ஜயேந்த்ரஸரஸ்வதீஸ்ரீபாதர்களால்
வாதூலஸ்ரீராமசந்திரசர்மாவின்பொருட்டு
நாராயணஸ்மரணம்செய்யப்பெறுகின்றது.—

ஸ்ரீதேவி விஷயங்களான ஸ்ரீதுர்கா ஸப்தசதீ முதலிய பலகரந்தங்களுக்கு தனது த்ராவிட பாஷையினுடைய அநுவாதத்தோடு வெளியிடப் பெற்று ப்ரஸித்தியடைந்த உம்மால் வெளியிடப் பெற்றுள்ள, ஸ்ரீபருத்வீதரபட்டாரகர் இயற்றிய ஸ்ரீலகுஸப்தசதீஸ்தவராஜமானது மந்த்ரவடிவாயமைந்த ஸ்ரீதுர்காஸப்தசதியினுடைய ஸாரத்தை உள்ளே கொண்டு பதினெட்டுசெய்யுட்களால் ஸ்ரீதேவியை துதிப்பது.

இந்த ஸ்தவத்திற்கு உம்மால் செய்யப்பெற்ற பாஷாநுவாதமானது — மூலத்தின் பொருளையும், பதார்த்ததாத்பர்ய விவரணத்தோடு நன்ருக விஸ்தாரமாக எழுதப்பெற்றுள்ளது.

ஆஸ்திகர்கள் ந்யாஸத்தோடு கூடிய இந்த ஸ்துதியின் பொருட்களை யுணர்ந்து படித்து இத்துதியினுடைய பெருமையையுணர்ந்து கொண்டு ஸ்ரீதேவியை ஆராதனை செய்து ஸ்ரீதேவியினுடைய அருளால் எல்லா மங்களங்களையும் அடைய வேண்டுமென்று ஆசீர்வாதம் செய்கிறோம்.

யாத்ராஸ்தாநம
கோகாட்நகரம்
கர்ணடகப்ரதேசம்
ஸித்தார்த்தமார்க
சீர்ஷசுத்தஸப்தமீ

நாராயணஸ்ம்ருதி:

முன்னுரை

दुर्गात्त्रायते यस्माद्देवी दुर्गेति कथ्यते ।
प्रपद्ये शरणं देवि दुं दुर्गे दुरितं हर ॥

துர்காத் ஸம்த்ராயதே யஸ்மாத் தேவீ துர்கேதி கத்யதே।
ப்ரபத்யே சரணம் தேவி தும் துர்கே துரிதம் ஹர ॥

கஷ்டங்களிலிருந்து நம்மைக் காப்பாற்றுகின்றவள் ஆதலால் 'துர்கா' என்று அழைக்கப்படுகிருள்.

மனிதர்களுக்கு வாழ்க்கையில் சோதனைகள் வரும்போது 'சண்டீ' என்றும், 'ஸ்ரீ துர்கா ஸப்தசதீ' என்றும் 'ஸ்ரீ தேவி மாஹாத்ம்யம்' என்றும் சொல்லப்படும் சிறப்பு வாய்ந்த கிரந்தத்தைப் பாராயணம் செய்தால் துர்கையின் அருளினுல் துர்வினைகள் அகன்று நன்மைகள் விளையும் என்பது பக்தர்களின் அனுபவம்.

இந்த நூல் ஸ்ரீ துர்கா ஸப்தசதியின் ஸாராம்சம் அடங்கிய 'ஸ்ரீலகுஸப்தசீஸ்தவராஜம்' என்பது, மிகவும் பழைமையானது. எங்கோ ஓரிடத்தில் பொக்கிஷம் போல கிடைத்த ஓலைச் சுவடியிலிருந்து பிரதி எடுத்து சீர் செய்து அதற்கு பிரதிபத உரை, விரிவான கருத்துரை இவைகளைச் சேர்த்து நமது பெரும் மதிப்புக்குரிய பண்டித ஸ்ரீவாதூல கே. ராமச்சந்திர சர்மா அவர்கள் பிரிசுரித்துள்ளார்.

இந்த 'லகுஸப்தசீஸ்தவராஜத்தை இயற்றியவர் காச்மீரத்தைச் சார்ந்த ஸ்ரீ ப்ருத்வீதர பட்டாரகர் என்ற மஹான்.

இனியவையும், எளிமையுமான ஸம்ஸ்கிருத சுலோகங்கள், ஆழ்ந்த கருத்துக்களை உள்ளடக்கிய சொற்கள், தேவியை நேரில் தரிசனம் செய்து துதிக்கும் பாவனை, படிக்கப் படிக்க அன்னையிடம் பக்திப் பரவசத்தை ஏற்படுத்தக் கூடிய சக்தி வாய்ந்தது

ஸ்ரீ சர்மா அவர்கள் இந்தத் துதியில் ந்யாஸத்திற்கு விரிவான விளக்கம் அளித்துள்ளார். செய்யுட்களில் காணப்படும் அரும் பதங்களுக்கு விசேஷமான தனி விளக்கமும் கொடுத்துள்ளார். அக் கருத்துக்களுக்கு இணக்கமாகவும்

Scanned by CamScanner

உடன்பாடாகவும் உள்ள மேற்கோள்களை மற்ற நூல்களிலிருந்து எடுத்துக் காட்டியுள்ளார். இவருடைய தமிழ் நடை மணற்பாங்கில் தடையில்லாமல் ஓடும் நீரோடை போல சீரானது.

நூலுக்கு அனுபந்தங்களாக, செய்யுட்களுடைய முதற்சொல் அகராதி, மேற்கோட்களாக காட்டப்படும் நூல்களின் அட்டவணை முதலியன இணைக்கப்பட்டுள்ளன. இவை இந்த பிரசுரத்தின் உபயோகத்தையும் மதிப்பையும் உயர்த்துகின்றன.

ஸ்ரீ ராமச்சந்திர சர்மா அவர்கள் ஒரு கர்ம யோகி, சாந்தசீலர், ஆத்ம குணங்கள் நிரம்பியவர், மிருதுபாஷி பெருமதிப்பு வாய்ந்த பழம்பெரும் நூல்களான ஏட்டுச் சுவடிகளையும், கையெழுத்துப் பிரதிகளையும் சேகரம் செய்வதிலும் அவைகளுக்கு திருத்தமான அச்சுப் பதிப்புகள் கொண்டு வருவதற்கு முயற்சி செய்வதிலேயே தன் வாழ் நாட்களின் பெரும் பகுதியைச் செலவிட்டுள்ளார். ஈசுவரார்ப்பணமாக இந்தத் தொண்டைச் செய்வதாலும், சுபாவத்திலேயே அடக்கமானவர் என்பதாலும் ஸ்ரீசர்மா அவர்கள் எந்த பிராபல்யத்தையும் நாடியதில்லை. ஆனால் அவருடைய அரும் தொண்டினைப் பாராட்டிப் போற்ற வேண்டியது நம்முடைய கடமை.

இந்த நூலுக்கு முகவுரை எழுத எந்தவிதத் தகுதியும் எனக்கு கிடையாது. ஆனாலும் அவருடைய அன்புக் கட்டளைக்கு கட்டுப்பட்டு இதை எழுதியுள்ளேன்.

இந்த நூலின் பிரதியை ஒவ்வொருவரும் தம் கிருஹத்தில் வைத்திருந்து அவ்வப்போது பாராயணம் செய்து வந்தால் அன்னை ஸ்ரீ துர்கை நிச்சயம் அருள் புரிவாள்.

ஸ்ரீ காந்த விலாஸ்
பிருந்தாவனம்
மயிலாபூர், சென்னை.

கே. நாராயணஸ்வாமி

———



नवाक्षरीयन्त्

THE KUPPUSWAMI SASTRI
RESEARCH INSTITUTE
MYLAPORE, CHENNAI-4.

ஸ்ரீ தேவ்யை நம:

ஸ்ரீலகுஸப்தசதீஸ்தவ:

தோற்றுவாய் —

शिवदे शिववामाङ्कनिलये सर्वदेहिनाम् ।
शिवं दिशतु मे नित्यं श्रिताभीष्टफलप्रदे ॥

शिववाम - अङ्क - निलये - பரமசிவனுடைய இடப் பக்கத்தில் நிலைத்துள்ளவளும் सर्व - देहिनाम् - பிறவியெடுத்த எல்லா ஜீவராசிகளுக்கும், शिवदे; - மங்களத்தைக் கொடுப்பவளும், श्रित - अभीष्ट - फल - प्रदे - தன்னைத் தஞ்சம் புகுந்த தொண்டர்களுக்கு விரும்பிய பயனைக் கொடுப்பவளுமாகிய ஓ அன்னாய்! मे - எனக்கு, नित्यम् - எப்பொழுதும், शिवम् - மங்களத்தை, दिशतु - கொடுப்பாயாக.

சிவதே சிவ்வாமாங்கநிலயே ஸர்வதேஹிநாம்.
சிவம் திசது மே நித்யம் ச்ரிதாபீஷ்டபலப்ரதே.

—பரமசிவனுடைய இடது பகுதியை நிலைத்த இருப்பிடமாகக் கொண்டவளும், பிறவி யெடுத்த எல்லா ஜீவராசிகளுக்கும் மங்களத்தைக் கொடுப்பவளும், தன்னைத் தஞ்சம் புகுந்த தொண்டர்களுக்கு விரும்பிய பயனை வரையாது வழங்குபவளுமான ஓ அன்னாய்! எனக்கு எப்பொழுதும் மங்களத்தைக் கொடுப்பாயாக.

— 0 —

துர்காஸப்தசதீ அல்லது தேவீமாஹாத்ம்யம் என்ற நூலை, நமது பாரதநாட்டிலுள்ளவர்கள் அறியாதார் எவரும் இருக்கமாட்டார்கள். இத்துதி எழுநூறு செய்யுட்களைக் கொண்டு மந்த்ரவடிவாயமைந்து ஒப்பற்ற பெருமையுடன் விளங்குவதுமாகும்.

இது அன்னையாம் பராசக்தியினுடைய, மந்த்ரங்கள், அபதாநம், சௌர்யம், பெருமிதம் முதலிய உயரிய பண்புகளைப் பலவனவாகப் புகழ்கின்ற பல விஷயங்களையும் தன்னுள்ளே கொண்டு தலைசிறந்து விளங்குவது, இத்துதிக்கு ஸுமார் ஐம்பதுக்கும் மேற்பட்ட உரைகள் ஆங்காங்கு சில நூல் நிலையங்களில் காண்கின்றன. அவைகளில் சில வெளி வந்துள்ளன. சில ஏட்டளவிலே (சுவடிகள்) இருப்பன. அவைகள் இது வரையில் வெளிவரவில்லை., உரையாசிரியர்கள் அனைவரும் இந்நூல் மந்த்ரங்கள் அடங்கிய ஓர் புனித நூல் எனவும் அபிப்பிராயம் கொண்டுள்ளனர். ஒரு சில உரையாசிரியர்கள் மந்த்ர விளக்கங்களைத் தழுவியும் உரை வகுத்துள்ளனர்.

இதைத் தினந்தோறும் பாராயணம் செய்து வந்தால், மனிதன் தனது வாழ்க்கையில் தினந்தோறும் தன்னையறியாமல் செய்கின்றதும், அறிந்து செய்கின்றதுமான தீவினைகள் அகன்றுவிடுமென்றும், மனத்தெளிவு உண்டாகுமென்றும், இறைபக்தியிலே மனம் லயித்துத் திளைத்து நிற்க வழியுண்டாகுமென்றும் அவ்வுரையாசிரியர்கள் புகழ்ந்துள்ளனர்.

இத்துதி ஸாதாரணமாகப் பொழுதுபோக்குவதற்காக எழுதப் பெற்றதல்ல. ஸுமேதஸ் என்ற மஹர்ஷி, ஸுரதன் என்ற அரசன், ஸமாதி என்ற வைச்யன் என மூன்று பாத்திரங்களை உருவகம் செய்து, முறையே ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற முக்குணங்களையும், அவரவர்களுடைய செயல்களுக்குத் தக்கவாறு பொருத்தி, அவர்களிடையே நிகழ்கின்ற ஸம்வாத வடிவாயமைத்துக் கதையைச் சொல்லியுள்ளது, அறிவிற் சிறந்த மஹதீயரான வேதவியாஸர் நமக்கு அருளியுள்ளார்.

இந்த முக்குண தத்வங்கள் யாவும் ஒவ்வொரு மனிதனிடத்திலும் நிகழ்வதை அவனுடைய வாழ்க்கையில் நாம் காணமுடியும். எனவே இவைகளுடைய தத்வங்களை தெளிவாக உணர்ந்துகொண்டு, மனிதன் ரஜஸ், தமஸ் என்ற குணங்களை நீக்கி, ஸத்வத்தைத் தழுவிய நிலையில் நிற்க வேண்டுமென்பதையும் இக் கதையின் வாயிலாக உபதேசம் செய்கிறார் எனச் சொல்லுவதும் மிகையாகாது.

நமது முன்னோர்களான மேதையிற் சிறந்த ஸ்ரீவேத வியாஸருடைய கற்பனைத் திறனை இத் துதியிலுள்ள ஒவ்வொரு செய்யுளிலும் காணலாம். இத் துதியின் மற்ற விரிவான விளக்கங்களை எனது தேவீமாஹாத்ம்யத்தினுடைய தமிழ் முகவுரையில் விஸ்தாரமாக விளக்கியுள்ளேன். அவற்றை அவ்விடத்திற் கண்டு தெரிந்து கொள்ளலாம்.

இன்னோரன்ன சிறப்பு வாய்ந்த இத் துதியைத் தினந்தோறும் பாராயணம் செய்வதற்கு முடியாத தொண்டர்களிடம் கருணை கூர்ந்து, பல மஹான்கள், மிகவும் சுருக்கிச் செய்யுள் வடிவிலே, மிகவும் அழகிய யாப்புக்களில் அமைத்துக் கொடுத்தும், பயன்பெறும் வகையில் பொருளுணர்வோடு பாராயணம் செய்வதற்குரிய வகையிலும் இயற்றியுள்ளனர்.

இவர்கள் அனைவரும் இளமதி எய்திய தொண்டர்கள் யாவரும், அன்னையின் அருளைப் பெறவேண்டுமென்ற உணர்வோடு கூட இவைகளைப் புனைந்துள்ளனர் என்பதையும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டுமென்பதும் அவசியமாகும். முன்பு சொல்லிய தேவீமாஹாத்ம்யத்தைச் சுருக்கம்செய்து, செய்யுள் நடையில் அமைத்துப் புனைந்துள்ள நூல்கள் வருமாறு—

முதலாவது - "சண்டீஸப்ததி" - சண்டீதுதி எழுபது - என்ற ஒரு துதி, ஏழாவது நூற்றாண்டில் வாழ்ந்தவரான "ஸ்ரீபாணபட்டர்" என்ற மஹாகவியினால் புனையப் பெற்றுள்ளது. இத் துதி பம்பாயிலுள்ள நிர்ணய ஸாகரம் பிரஸில் ஓர் குறிப்புரையுடன் வெளியிடப் பெற்றுள்ளது. இத் துதிக்கு

Scanned by CamScanner

விரிவாயுள்ள மூன்று உரைகள் காண்கின்றன. அவைகளில் ஒன்று என்னிடம் உள்ளது.

இரண்டாவதாக, "தேவீமாஹாத்ம்யஸங்க்ரஹம்" அல்லது "மஹிஷமர்தநீஸ்தவம்" என்ற ஓர் துதி. 'ஸ்ரக்தரா' என்ற யாப்பில் அமைந்துள்ள இத் துதி பத்துச் செய்யுட்களைக் கொண்டது. இத் துதியைச் சில ஆண்டுகளுக்கு முன்பு விரிவான பதவுரை, கருத்துரை, விசேஷமாயுள்ள விளக்கங்கள் முதலியவைகளோடு என்னால் வெளியிடப்பெற்றது. அது இப்பொழுது கிடைப்பதரிது. இத் துதி தேவீமாஹாத்ம்யத்தினுடைய ஸாரவடிவாயமைந்து, சுவை குன்ருது பத்துச் செய்யுட்களில் அடங்கியுள்ளது இத் துதியின் தனிச்சிறப்பாகும். இதைப் புனைந்தவருடைய பெயர் தெரியவில்லை.

மூன்ருவதாக, "ஸ்ரீமதப்பயதீக்ஷிதர்" இயற்றிய "துர்கா சந்த்ரகலாஸ்துதி" என்பது. இத் துதி பதினெட்டுச் செய்யுட்களில் அமைந்தது. இது 'வஸந்ததிலகம்' என்ற அழகிய யாப்பில் அமையப் பெற்றது. இத் துதிக்கு இவரே ஸம்ஸ்க்ருதத்தில் ஓர் உரையையும் இயற்றியுள்ளார். இதுவும் "அப்பயதீக்ஷிதேந்த்ரக்ரந்தாவலி" என்ற தலைப்பில் என்னால் வெளியிடப் பெற்றுள்ளது. இதற்கு ஓர் தமிழுரையும் இருப்பதாகத் தெரியவருகிறது.

நான்காவதாக, ஸ்ரீநீலகண்டதீக்ஷிதர் புனைந்துள்ள "சண்டீரஹஸ்யம்" என்பது. சில ஆண்டுகளுக்கு முன்பு மூலம் மட்டும் என்னால் வெளியிடப் பெற்றது. இத் துதிக்கு ஓர் விரிவான தமிழுரையும் எழுதி வருகிறேன். இதையும் இவ் வரிசையில் வெளியிட முயற்சி செய்து வருகிறேன்.

ஐந்தாவது இந்த "லகுஸப்ததசீ" என்பது. இதைப் புனைந்தவர், "ப்ருத்வீதராசார்யர்" என்ற ஓர் ஸித்த புருஷராவர். இவர் காச்மீரதேசத்தைச் சேர்ந்தவர். 'ப்ரத்யபிஜ்ஞா' என்ற சிவாத்வைத மதத்தை தழுவியவர். இவர் "ஸோமாநந்தர், பட்டோத்பலர், அபிநவகுப்தர், க்ஷேமராஜர், சிவாநந்தர், அம்ருதாநந்தர், விரூபாக்ஷஸித்தர், ஸ்ரீவித்யாசக்ரவர்த்தி போன்ற மஹாமாஹேச்வராசார்யர்களுடைய பரம்பரையைச் சார்ந்தவர்.

இவருடைய குரு "ஸ்ரீசம்புநாதர்" என்ற ஸித்த புருஷர். இவருக்கு "ஸித்தநாதர்" என்ற பெயருமுண்டு. இவர் பதினைன்ருவது நூற்ருண்டில் வாழ்ந்தவரெனவும் தெரியவருகின்றது. இந்த சிவாத்வைதிகள், சிவனும், சக்தியும் ஒன்றே என்ற கொள்கையைத் தழுவியவர்கள். இதற்கு "பீஜங்குரம்" (விதையும் முளையும்) என்ற ந்யாயத்தை மேற்கோளாகக் காட்டுவர். 'ஸமப்ரதானௌ ஸமஸத்வௌ' என்ற உபநிஷத் வாக்கியத்தைப் பெரிதும் பின் பற்றுகின்றவர்கள். எவ்வாறு பீஜத்தின் (விதை) மேல் பகுதியாகிய தோலால், உட் பகுதியாகிய விதை மூடப் பெற்றுள்ளதோ, அவ்வாறே சிவசக்திகள் இரண்டும் ஒன்றுக்கொன்று இணைபிரியா நிலையில் இருப்பது என்ற கொள்கையைப் பின் பற்றுகின்றவர்கள். மற்ற விளக்கங்கள் ஸம்வித்சாஸ்த்ரங்களின் வாயிலாகத் தெரிந்துகொள்ளற்பாலன.

மற்றும், இவருடைய "புவநேச்வரீஸ்தோத்ரம்" அல்லது "ஸித்தஸாரஸ்வத ஸ்தோத்ரம்" என்ற ஒரு துதி எனக்குக் கிடைத்துள்ளது இதுவும் என்னால் சில ஆண்டுகளுக்கு முன்பு மூலம் மட்டும் வெளியிடப் பெற்றுள்ளது. இத் துதி, ஸ்ரீ கௌடபாதர், புனைந்துள்ள "ஸுபகோதயம்" ஸ்ரீமதாசார்யபகவத்பாதர் புனைந்துள்ள "ஆநந்தலஹரீ" ஸ்ரீலகுபட்டாரகர், (காளிதாஸ பகவத்பாதர்) புனைந்துள்ள "லகுஸ்துதி" அல்லது "த்ரிபுரபாரதீஸ்துதி" என்ற

இவைகளைப் போலவே மந்த்ரவிளக்கங்கள், யந்த்ர விளக்கங்கள், ப்ரயோகங்கள் முதலியவைகளைத் தன்னுளே கொண்டு விளங்குவது. இவர் ஸ்ரீஸௌக்கத்திற்கும் ஒரு பாஷ்யம் இயற்றியுள்ளதாகத் தெரிய வருகிறது.

இத் துதிக்கும் விரிவான தமிழாக்கமும் வழக்கம் போல் செய்து வருகிறேன். துதிமுழுவதும் அன்னையாம் பரதேவதை மந்த்ர வடிவாயமைந்தவள் என்பதைப் பல கோணங்களில் வர்ணனை செய்து, அவளுடைய திருமேனியிலே தன்னை ஒன்றிய நிலையில் லயிக்கச் செய்து, தன்னை ஆட்கொள்ள வேண்டுமென்பதையும், ஸ்ரீ குருவினுடைய பாரம்யங்களையும், (பெருமையும்) அவளுடைய பெருகிய அருளையும் வேண்டுவது இத் துதியினுடைய தனிச்சிறப்பாகும்.

மற்றும், ''சாரதாதிலகஸ்துதி'' என்ற பெயரில் ஒரு துதி ஸ்ரீபரமசிவனையும், ஸ்ரீபார்வதியையும், முறையே, ''ப்ரகாசம், விமர்சம்'' என்ற பெயரைச் சூட்டி உருவகம் செய்து, காச்மீரதேசத்திலே பரவியுள்ள ஸம்வித்சாஸ்த்ரதைத் தழுவி, உபநிஷதங்களின் கருத்துக்களை யமைத்து எளிய நடையில் கேள்வி, பதில் என்ற வகையில், யாழிலும் இசைத்துப் பாடுவதற்கு அநுகூலமாகவும் இது புனையப் பெற்றுள்ளது.

இத் துதியும் ஓர் ஸித்த புருஷனால் புனையப் பெற்றது எனத் தெரிய வருகிறது. ஒருக்கால் இவரே புனைந்துள்ளனரோ எனவும் தோன்றுகிறது. இது ஒரே சுவடியாயிருப்பதோடு எழுத்துக்கள் தெளிவில்லாது மலையாள லிபியில் எழுதப் பெற்றுள்ளது. இதை ஒருவாறு செப்பம் செய்து ஒரு பிரதி எடுத்துள்ளேன். ஆயினும் மனத்திற்கு திருப்தியளிக்கவில்லை. அக் காரணத்தால் மேலும் பரிசீலனை செய்து வருகிறேன். கூடிய விரைவில் மூலத்தோடு தமிழாக்கமும் செய்து வழக்கம் போல் வெளியிடுவதற்கு முயற்சியும் செய்து வருகிறேன்.

எனவே, இப்பொழுது வெளிவருகின்ற இத்துதியும் ஒரே யொரு சுவடிதான் கிடைத்தது. வேறு எங்கு தேடியும்

இரண்டாவது சுவடி கிடைக்கவில்லை. இதை மூலத்தோடு சில அபூர்வமாயுள்ள இரண்டு மூன்று துதிகளை இணைத்து சில ஆண்டுகளுக்கு முன்பு வெளியிட்டேன். இதைத் தழுவியே இந்தத் தமிழ் அநுவாதமும், விரிவான பொருள் விளக்கங்களோடு வழக்கம் போல் வெளிவருவதுமாகும்.

தவிர, இத்துதிக்கு ஆசிரியரே அங்கந்யாஸம், கரந்யாஸம் போன்றவைகளோடு, த்யானம், குருஸ்துதி இவைகளை யமைத்து, இத் துதியைத் தொடங்குவது ஏனைய துதிகளைக் காட்டிலும் மாறுபட்டிருப்பதோடு, தனிச் சிறப்பும் கொண்டு விளங்குவது, எனவே இவைகளுக்கு இதுவரையில் வெளியிடப் பெறாத அங்கந்யாஸங்களுடைய விளக்கமும், விரிவாகத் தமிழில் வரைந்து கொடுத்துள்ளது ரஸிகர்களுக்கு ஓர் நல்விருந்தாகும் என்பதும் மிகையாகாது.

அன்னையின் பால் எனக்கு இயல்பாயமைந்த நசையின் காரணமாகவே இவைகள் போன்ற துதிகளைத் தேடிப் புனையுமாறு எனது அந்தராத்மாவில் இருந்துகொண்டு, அன்னை தூண்டிவருவதாலேயே இப் பணியை நான் மேற் கொண்டுள்ளேன். இப் புநிதமான ஞானவேள்வியினால் தொண்டர்களுக்கு ஏதாகிலும் நல்லுணர்வு தோன்றி, அன்னையினுடைய ஆராதனையில் மனம் லயித்தால், அதையே எனது உழைப்பின் பெருகிய பயனாகும் என்பதையும் நான் கண்டு மன அமைதி அடைவேன்.

எனவே அன்னையின் திருவருளிலே ஒன்றிய தொண்டர்கள் அனைவரும் இப் புநிதமான ஞான வேள்விக்கு உதவி யளித்து, இவைகள் போன்ற அரியதான துதிகளை வெளிவரச் செய்து, துதிகளை வாங்கிப் படித்து அன்னையின் லீலாவிபூதிகளில் திளைத்து, அவளுடைய திருவருளுக்குத் தங்களைத் தகுதியுள்ளவர்களாகச் செய்து கொண்டு, மன நிறைவையும், அன்னையின் திருவருளையும் பெற்று, ஞானஸம்

பத்துக்களோடு விளங்கவேண்டுமென்று அன்னையினுடைய திருச்சரணகமலங்களின் சார்பாக வேண்டுகிறேன்.

முடிவாக இச்செய்யுளையும் வாசகர்களிடம் ஸமர்பணம் செய்து தெரிவித்துக் கொள்ளுகிறேன்

"पार्वतीमोषधीमेकामपर्णां मृगयामहे ।
शूली हालाहलं पीत्वा यया मृत्युंजयोऽभवत् ॥ "

पार्वतीम्-பார்வதீ என்ற, एकाम्- முக்யமாயுள்ள, अपर्णाम्- அபர்ணாயென்னும், ओषधीम्- மருந்துக் கொடியை, मृगयामहे- தேடுவோமாக, यया - எந்த அபர்ணா என்ற மருந்துக் கொடியினால், शूली - பரமேச்வரன், हालाहलम् - ஹாலாஹலம் என்ற விஷத்தை, पित्वा - பருகி, मृत्युंजय: - ம்ருத்யுளவ வெற்றி கொண்டவனாக, अभवत् - இருந்தானோ.

"பார்வதீ மௌஷதீமேகா-
மபர்ணாம் ம்ருகயாமஹே.
சூலீ ஹாலாஹலம் பீத்வா
யயா ம்ருத்யும்ஜயோऽபவத்."

—மலையரசன் மகளாம் பார்வதீயென்ற அபர்ணாவைத் தனித் துணையாகக் கொண்டு, ஸ்ரீபரமசிவன் ஹாலாஹலம் என்ற கொடிய விஷத்தைப் பருகி, அந்த அபர்ணாதேவியினுடைய துணையினால் ம்ருத்யுவையும் (யமன்) வெற்றி கொண்டானோ, அத்தகைய சிறப்பு வாய்ந்த அன்னையாம் அபர்ணாதேவியை நாமும், பிறவிப் பயனைக் களைவதற்குரிய விடுதலையின் பொருட்டு, வேட்கை கொண்டு தேடிக் கொண்டிருப்போமாக.

இச் செய்யுளில் மலையரசன் மகள் பார்வதீ, அவளுக்கு 'அபர்ணா' என்ற பெயரும் உண்டு. அதாவது பார்வதீ என்ற

சொல் மலையைச் சார்ந்து நிற்பது. எனவே மலையில் ஓஷதிகள் (மருந்துக் கொடிகள்) தோன்றுவது இயலபாமன்றோ! இந்த ஸமாநதர்மங்களைக் கொண்டு இச் செய்யுளில் அன்னையை உருவகம் செய்யப் பெற்றுள்ளது.

அபர்ணா என்ற சொல்லின் விளக்கம் வருமாறு—பர்ணம்—இலை – அந்த இலையைக் கூட புசிக்காமல் அன்னையாம் பார்வதீதேவி, பரமசிவனைப் பதியாகப் பெறுவதற்குக் கொடியதான தவத்தைச் செய்தாள் என்ற வரலாறு புராணங்களிலும், மஹாகவி காளிதாஸன் புனைந்துள்ள குமாரஸம்பவம் என்னும் காவ்யத்திலும் பரக்கக் காணலாம். இக் காரணத்தாலேயே பார்வதிக்கு 'அபர்ணா' என்ற மற்றொரு பெயரும் தோன்றியது என்பதுமாகும். சிவார்ப்பணம்.

சிவாய குரவே நம :

— 0 —

ॐ नमश्चण्डिकायै

श्रीलघुसप्तदशीस्तवः

अस्य स्तवस्य न्यासादि —

अस्य श्रीलघुसप्तदशीस्तोत्रमहामन्त्रस्य, भगवान् सदाशिव ऋषिः, इति शिरसि; अनुष्टुप्छन्दसे नमः इति मुखे; त्रिमूर्तिदेवतायै नमः इति हृदये। वाग्भवं बीजम्; माया शक्तिः; लक्ष्मीः कीलकम्। मम चतुर्विधपुरुषार्थसिद्ध्यर्थं जपे विनियोगः इति सर्वाङ्गे ; मूलमन्त्रेण षडङ्गन्यासाः कार्याः।

अस्य - இந்த, लघुसप्तदशीस्तोत्रमहामन्त्रस्य - லகுஸப்ததசீ ஸ்தோத்ரம், என்ற, மஹாமந்த்ரத்திற்கு, भगवान - அறுவகை ஐச்வர்யங்கள் நிறைந்த, सदाशिवः ஸதாசிவன், ऋषिः - ரிஷியாவர். इति - என்று, शिरसि - சிரஸில் (விரல்களால் தொடவேண்டும்) अनुष्टुप्छन्दसे - அநுஷ்டுபச்சந்தஸின் பொருட்டு, नमः - நமஸ்காரம். इति - என்று, मुखे - முகத்தில் தொடவேண்டும். त्रिमूर्तिदेवतायै - மூன்று மூர்த்திகளுடைய வடிவாயமைந்த தேவதையின் பொருட்டு, नमः - நமஸ்காரம் इति - என்று, हृदये - ஹ்ருதயத்தில் தொடவேண்டும். वाग्भवम् - வாக்பவம் என்பது, बीजम् - பீஜமாகும். माया - மாயா என்பது शक्तिः - சக்தியாகும். लक्ष्मीः - லக்ஷ்மீ என்பது कीलकम् - கீலகமாகும். मम - என்னுடைய, चतुर्विधपुरुषार्थसिद्ध्यर्थं - நால்வகையாயுள்ள புருஷார்த்தங்களுடைய நிறைவின் பொருட்டு, जपे - ஜபத்தில், विनियोगः - விநியோகமாகும் इति - என்று सर्वाङ्गे - எல்லா அவயவங்களிலும் தொடவேண்டும். मूलमन्त्रेण-

மூலமந்த்ரத்தினல், अङ्गन्यासाः - ஆறு அங்கங்களுடைய ந்யாஸங்கள், कार्याः - செய்யப் பெறவேண்டுவனவாம்.

— 0 —

ஓம் நம : சண்டிகாயை.

ஸ்ரீலகுஸப்ததசீஸ்தவ:

— 0 —

அஸ்ய ஸ்தவஸ்ய ந்யாஸாதி --

இந்த ஸ்தவத்தினுடைய ந்யாஸங்கள் முதலியன சொல்லப் பெறுகின்றன.

அஸ்ய ஸ்தோத்ர ஸ்ரீலகுஸப்ததசீ மஹாமந்தஸ்ய, பகவான் ஸதாசிவ ரிஷி: இதி சிரஸி; அநுஷ்டுப்ச் சந்தஸே நம : இதி முகே; த்ரிமூர்திதேவதாயை நம : இதி ஹ்ருதயே; வாக்பவம் பீஜம்; மாயா சக்தி : லக்ஷ்மீ: கீலகம்; மம சதுர்விக புருஷார்த்தஸித்யர்த்தே ஜபே விநியோக : இதி ஸர்வாங்கே மூலமந்தரேண ஷடங்கந்யாஸா; கார்யா:.

இந்த ஸப்ததசீ என்ற துதியாகிய மஹாமந்தரத்திற்கு, அறுவகை ஐச்வர்யங்களும் தன்னிடத்திலே நிலேத்துள்ளவனும், மங்களவடிவாய்த் திகழ்கின்றவனுமாகிய ஸதாசிவனே ரிஷியாவர், அவருக்கு நமஸ்காரம் என்று சென்னியிலே விரல்களால் தொடவேண்டும். அநுஷ்டுப் என்னும் ஒருவகைச் சந்தஸ்ஸின் பொருட்டு நமஸ்காரம் என்று முகத்தில் விரல்களால் தொடவேண்டும். மூன்று மூர்த்திகளுடைய வடிவாயமைந்துள்ள தேவதையின் பொருட்டு நமஸ்காரம் என்று ஹ்ருதயத்தில் விரல்களால் தொடவேண்டும்.

வாக்பவம் (ஐம்) என்பது பீஜமாகும். மாயா (ஹ்ரீம்) என்பது சக்தியாகும். லக்ஷ்மீ : (ஶ்ரீம்) என்பது கீலகமாகும்.

என்னுடைய விழைவுக்குரிய புருஷார்த்தங்களுடைய[1] நிறைவைப் பெறுவதின் பொருட்டு ஜபத்திலே விநியோகம்[2] செய்கிறேன் என்று எல்லா அவயவங்களையும் விரல்களால் தொடவேண்டும். மறுபடியும் மூலமந்தரங்களைக் கொண்டே ஷடங்கந்யாஸங்களைச் செய்ய வேண்டும் என்பது மரபாகும்.

ध्यानम् —

नमो विरिञ्चेर्वरवल्लभायै
नमोऽस्तु ते शंकरवल्लभायै ।
नमोऽस्तु नारायणवल्लभायै
श्रीचण्डिकायै शरणं प्रपद्ये ॥ १ ॥

विरिञ्चेः - நான்முகனுடைய, वर-वल्लभायै - பெருமை பொருந்திய நாயிகையின் பொருட்டு, नमः - நமஸ்காரம் शंकर-वल्लभायै - மங்களத்தைச் செய்கின்ற மஹேசனுடைய நாயிகையான, ते - உனக்கு, நமஸ்காரம். अस्तु - இருப்பதாக; नारायण-वल्लभायै - நாராயணனுடைய நாயிகையின் பொருட்டு नमः - நமஸ்காரம், अस्तु - இருப்பதாக; श्रीचण्डिकायै - மங்கள வடிவாயமைந்த சண்டிகாதேவியின் பொருட்டு, शरणम् - அடைக்கலத்தை, प्रपद्ये - (நான்) அடைகிறேன்.

---

[1] புருஷார்த்தங்கள் - அறம், பொருள், இன்பம், வீடு என்றுல் வகையாகும்.

[2] வி- நி- யோக :- என்ற சொல்லின் விளக்கம் வருமாறு- வி- விசேஷமாக, நி- உறுதியாயுள்ள, யோக- இணைப்பு - சேர்த்தல். அதாவது மனத்தை ஒரு முகமாகக் குவியச் செய்து, தனது விழைவுக்குரிய குறிக்கோளைப் பெறுவதற்குத் தகுதியாகச் செய்து, பயனில் ஜபத்தை அர்ப்பணம் செய்ய வேண்டு மென்பது.

ब्रह्मादयो देवि भजन्ति देवाः
वसिष्ठमुख्या ऋषयश्च सर्वे ।
सिन्दूरवर्णा तरुणार्क कान्ति
श्रीचण्डिके त्वां सततं स्मरामि ॥ २ ॥

हे देवि- ஒளியின் வடிவாயிலங்கும் ஓ அன்னாய்! देवाः- தேவர்களாகிய, ब्रह्मादयः - நான்முகன் முதலியவர்களும், वसिष्टमुख्याः- வஸிஷ்டரை முன்னிட்டுள்ள, सर्वे -எல்லா, ऋषयः च - மஹர்ஷிகளும், भजन्ति - (உன்னை) ஸேவிக்கின்றனர். सिन्दूरवर्णाम्- ஸிந்தூரத் துகள் போன்ற செந்நிறத்தை யுடையவளும், तरुणार्ककान्तिम् - இளம் பகுதியை நிகர்த்த காந்தியையுடையவளுமான, त्वाम् - உன்னை, सततम् - எப்பொழுதும், स्मरामि - சிந்தனை செய்கிறேன்.

सहस्रचन्द्रार्कसमानकान्तिं
बन्धूकपुष्पारुणपङ्कजाभाम् ।
देदीप्यमानाग्निसमानकान्तिं
श्रीचण्डिके त्वां सततं स्मरामि ॥ ३ ॥

सहस्रचन्द्रार्कसमानकान्तिम् - ஆயிரம் சந்திரன், ஸூர்யன் என்ற இவர்களுக்கு நிகரான காந்தி போன்ற காந்தியை யுடையவளும் बन्धूकपुष्पारुणपङ्कजाभाम् - செம்பருத்தி மலர் போன்ற செந்நிறக் காந்தியும், தாமரை மலருடைய சோபை போன்ற சோபையையுடையவளும், देदीप्यमान-आग्नि- समान - कान्तिम्- நன்கு ஒளிருகின்ற அக்னிக்கு நிகரான காந்தியோடு கூடியவளுமான, हे चण्डिके - ஓ சண்டிகே, त्वाम् - உன்னை, सततम् - எப்பொழுதும், स्मरामि சிந்தனை செய்கிறேன்.

Scanned by CamScanner

अथ स्वगुरं प्रणमति —

श्रीसिद्धनाथ भवतो भुवनैकभर्तुः
माया परामृतमयी निगमान्तरस्था ।
एषा त्वनन्यशरणस्य ममाश्रुतस्य
वृत्ता निसर्गकरुणावरुणालयस्था ॥ ४ ॥

अथ - பிறகு, स्वगुरुं - தனது குருவை प्रणमति — நமஸ்காரம் செய்கிறர்—

हे श्रीसिद्धनाथ - அறுவகைஐச்வர்யங்களும் நிரம்பியவனும், ஸித்தர் கணங்களுக்குத் தலைமை பூண்டவனுமாகிய ஓ குரோ! भुवन - एक —भर्तुः - பதினன்கு உலகங்களுக்கும் ஒரே தலைவனுயுள்ள, भवतः — உன்னுடைய, करुणा - वरुण- आलयस्था கருணையென்றும் கடலில் நிலைத்துள்ளதும், परा - अमृतमयी - சிறந்த அமுதம் நிரம்பியதும், निगम - अन्तरस्था - வேதங்களினுள்ளே நிலைத்துள்ளதுமான, एषा - இப் பெருமை வாய்ந்த, भाषा - சொல்லானது, अश्रुतस्य - இதுவரையில் கேட்கப் பெருதவனும், अनन्यशरणस्य - வேறு புகலிடம் காணுதவனுமாகிய, मम - எனக்கு, वृत्ता - (உன்னிடத்தில்) தோன்றியதாகவே இருப்பதாக.

इति न्यासविधिः

— 0 —

த்யாநம் ; சிந்தனை சொல்லப் பெறுகின்றது—

நமோ விரிஞ்சேர் வரவல்லபாயை
நமோऽஸ்து தே சம்கரவல்லபாயை.
நமோऽஸ்து நாராயணவல்லபாயை
ஸ்ரீசண்டிகாயை சரணம் ப்ரபத்யே. (க)

—நான்முகனுடைய தலைசிறந்த நாயிகையாயுள்ளவளும், சம்கரனுடைய தலைசிறந்த வல்லபையாயுள்ளவளும், நாராயணனுடைய தலைசிறந்த நாயிகையாயுள்ளவளுமான ஸ்ரீசண்டிகாதேவியை நான் தஞ்சம் புகுகிறேன்.

இச் செய்யுளில் 'வல்லபா' (நாயிகை) என்ற சொல்லின் பொருள் வருமாறு - 'वल संवरणे' 'வல - ஸம்வரணே' என்ற வினைச் சொல்லிலிருந்து இச் சொல் தோன்றியது. வல்லபா-நாயிகா அல்லது தலைவி என்பதாகும்.

"प्रेयसी दयिता कान्ता प्राणेशा वल्लभा प्रिया ।
हृदयेशा प्राणसमा प्रेष्टा प्रणयिनी च सा ॥ "

प्रेयसी, दयिता, कान्ता, प्राणेशा, वल्लभा, प्रिया, हृदयेशा, प्राणसमा, प्रेष्टा, प्रणयिनी च என்ற இவை யாவும் ஸா அந்த நாயிகைக்குப் பெயர்.

"ப்ரேயஸீ தயிதா காந்தா ப்ராணேசா வல்லபா ப்ரியா.
ஹ்ருதயேசா ப்ராணஸமா ப்ரேஷ்டா ப்ரணயிநீ ச ஸா."

—ப்ரேயஸீ, தயிதா, காந்தா, வல்லபா, ப்ரியா, ஹ்ருதயேசா, ப்ராணஸமா, ப்ரேஷ்டா, ப்ரணயிநீ என்ற இந்த ஒன்பதும் நாயிகைக்குப் பெயர் என ஹேமசந்த்ர-கோசம் சொல்லும்.

மற்றும் ஒரே சக்தியானவள் நான்முகனுடைய படைப்புத் தொழிலுக்கு வேண்டிய சக்தியை (திறமை) கொடுத்து அவருக்கு நாமகள் என்ற நாயிகையாக இருப்பவள். அதே போல சம்கரனுடைய ஊழித்தொழிலைச் செய்வதற்குரிய சக்தியைக் கொடுத்து, மலைமகள் என்ற நாயிகையாக இருப்பவள். அவ்வாறே நாராயணனுடைய

Scanned by CamScanner

காத்தல் (ரக்ஷிப்பது) என்ற தொழிலுக்குரிய சக்தியைக் கொடுத்து, திருமகள் என்ற நாயிகையாக இருப்பவள் என்பது தாத்பாயம் (க) *

ப்ரஹ்மாதயோ தேவி பஜந்தி தேவா :
வஸிஷ்டமுக்யா: ரிஷய:ச ச ஸாவே.
ஸிந்தூரவர்ணாம் தருணார்க்ககாந்திம்
ஸ்ரீசண்டிகே த்வாம் ஸததம் ஸ்மராமி (2)

ஒளியுடன் இலங்கும் ஓ அன்னாய்! மங்களவடிவே! ஸிந்தூரத்துக்களே போன்ற சென்னிறப் பொலிவுடன் விளங்குகின்றவளும், இளம் பரிதியை நிகர்த்த காந்தி போன்ற காந்தியை யுடையவளுமான உன்னை, நான்முகன் முதலிய தேவர்களும், வஸிஷ்டரைத் தொடர்ந்த எல்லா மஹர்ஷிகளும் எப்பொழுதும் ஸேவித்தவண்ணம் இருக்கின்றனர். அப்பெருமை வாய்ந்த உன்னை, உனது தொண்டனாகிய நான் எப்பொழுதும் சிந்தனை செய்தவண்ணமிருக்கிறேன். எனக்கு மங்களத்தைக் கொடுப்பாயாக (உ)

ஸஹஸ்ரசந்த்ரார்க ஸமான காந்திம்
பந்தூக புஷ்பாருணபங்கஜாபாம்.
தேதீப்யமாநாக்நிஸமாநகாந்திம்
ஸ்ரீசண்டிகே த்வாம் ஸ்ததம் ஸ்மராமி (ங)

ஆயிரக்கணக்கான நிறைமதி, ஆயிரக்கணக்கான ஆதவர் என்ற இவர்களுடைய காந்தியை யுடையவளும், செம்பருத்தி மலரெனச் சென்னிறப் பொலிவு கொண்டு, தாமரை மலர் போன்ற சோபையை யுடையவளும், அக்நிக்கு நிகரான நன்கு

* மற்ற விரிவான விளக்கங்களை ஏமது ஸௌந்தர்ய-லஹரீ உரையிலும், தேவீ மாஹாத்ம்யம், தேவீ பஞ்சஸ்தவீ இவைகளின் உரையிலும், தேவீபாகவதம், லக்ஷ்மீதந்த்ரம் முதலியவைகளிலும் விஸ்தாரமாகக் காணலாம்.

ஒளிருகின்ற காந்தியையுடையவளுமான உன்னை, ஓ மங்கள வடிவே! நான் எப்பொழுதும் சிந்தனை செய்த வண்ணமிருக்கிறேன். எனக்கு அருள்வாயாக (3)

ஸ்ரீ ஸித்தநாத பவதோ புவனைகபர்து :
பாஷா பராம்ருதமயீ நிகமாந்தரஸ்தா.
ஏஷா த்வநந்ய சரணஸ்ய மமாச்ருதஸ்ய
வ்ருத்தா நிஸர்ககருணாவருணாலயஸ்தா. (2)

ஸித்தர் கணங்களுக்கெல்லாம் தலைவனாக விளங்குகின்ற ஹே குரோ! உலகங்களுக்கெல்லாம் தலைவனும், இயல்பாயுள்ள கருணையென்னும் கடலின் வடிவாயமைந்தவனுமான, உன்னுடைய பெருமை பொருந்திய இச் சொல்லானது, சிறந்த அமுதம் நிரம்பியதும், வேதங்களினுள்ளே நிலைத்திருப்பதால் சிறந்து விளங்குகின்றதன்றோ! இது வரையில் நான் ஒன்றையும் கேள்விப்படாதவனும், வேறு புகலிடம் காணாதவனுமாகிய எனக்கும் அச் சொல்லானது உன்னிடமிருந்தே தோன்றியதாகவே அமைவதாக.

அதாவது இத்துதி நான் இயற்றியதில்லை. ஸ்ரீகுரு நாதனுடைய அமுதப் பெருக்கென்னும் வாங்மயத்தின்* வழியாக எனக்குக் கிடைத்துள்ளது என்பது தாத்பர்யம்.

இவ்வாறு த்யாஸத்தின் விளக்கம் முற்றும்.

— 0 —

* வாங்மயம் - சொற்களின் தொகுதி

தோற்றுவாய் —

அங்கந்யாஸங்களுடைய விரிவாயுள்ள விளக்கம் சொல்லப் பெறுகின்றது —

ஆரியர்களாகிய நமது வைதிகமதத்தில் எந்த வகையான ஆராதனையையோ, மந்த்ர ஜபத்தையோ, துதியைப் பாராயணம் செய்வதற்கோ தொடங்குவதற்கு முன்பு, அந்த அந்த தேவதைகளுடைய உருவம் நமது மனத்திலே நிலைத்து நிற்பதற்கு அங்கந்யாஸம் என்றவைகளைச் செய்ய வேண்டுமென்று நமது முன்னோர்களான மஹர்ஷிகள் நமக்குக் கட்டளையிட்டுப் போந்தனர்.

இந்த ந்யாஸங்களைப் பொருளுணர்ந்து செய்து வந்தால் அளவு கடந்த பயனும் உண்டாகுமென்றும், கேவலம் மந்த்ரங்களைப் பொருளுணராமல் உச்சாரணம் செய்து கைகளை அபிநயம் செய்வதும், கோரிய பயனைக் கொடுக்காததோடு, பாபத்தையும் கொடுக்குமென்பதும் அந்த முன்னோர்களுடைய அபிப்பிராயமுமாகும்.

இதற்கு ஷடங்கந்யாஸம் என்ற மற்றொரு பெயருமுண்டு. இவைகளுடைய விளக்கங்களை வாசகர்களாம் தொண்டர்கள் உணர்ந்து கொண்டு, ஆராதனையையோ, மந்த்ர ஜபத்தையோ, துதியின் பாராயணத்தையோ செய்வதற்கு முன்பு மனம் குவியச் செய்து, அதை ஒரு நிலையிலே நிலைக்கச் செய்து கொள்ள வேண்டுமென்ற விழைவுடன், என்னுலியன்ற வரையில் பொருள் விளக்கங்களை வரைந்து, அன்பர்களாம் தொண்டர்களிடம் ஸமர்பணம் செய்யப் பெறுகின்றது. வாசகர்கள் பொருளுணர்ந்து சிந்தனை செய்து அன்னையின் திருவருளுக்குத் தங்களைத் தகுதியுள்ளவர்களாகச் செய்து கொள்ள வேண்டுகிறேன்.

ஆசிரியன்

— 0 —

மந்த்ரங்களுடைய விளக்கம்:

மஹாகணபதி ஸஹஸ்ரநாமபாஷ்யத்தில்—

" सप्तकोटिमहामन्त्रमन्त्रितावयवद्युतिः ।" இதி ।

सप्तकोटि - महा - मन्त्र - मन्त्रित- अवयव -द्युतिः ஏழுகோடியாகப் பெருகிய மந்த்ரங்களினுலும் சிந்தனை செய்து துதிப்பதற்குத் தகுதி வாய்ந்த அவயவங்களுடைய ஒளியுடன் இலங்குகின்றவர் "மஹாகணபதி" என்றவாறு.

"ஸப்தகோடிமஹாமந்த்ரதவயவத்யுதி:"

"ஏழுகோடியாக விரிந்துள்ள பெருகிய மந்தரங்களினுல் சிந்தனை செய்து துதிப்பதற்குரிய அவயவங்களோடு இலங்குகின்றவர் அந்த மஹாகணபதி" என்பது அந்தப் பகுதிச் செய்யுளின் பொருள். உரையாசிரியர் ஸ்ரீ பாஸ்கரராயர் இச் செய்யுளுக்குப் பின்வருமாறு உரை கண்டுள்ளார்.

" विश्वरूपस्य तेऽङ्गानि सर्वमन्त्राधिदेवताः ।
अतः संजातमन्त्रैस्तैर्द्योतसेऽवयवैरिति ।"

विश्वरूपस्य - உலக வடிவாயமைந்த, ते - உன்னுடைய, अङ्गानि - அவயங்கள், सर्वमन्त्र - अधिदेवताः - எல்லா மந்த்ரங்களுக்கும் தலைமையாயுள்ள தேவதையாகத் திகழுகின்றன. अतः - ஆதலின், संजात - मन्त्रैः - தோற்றுவிக்கப் பெற்ற மந்த்ரங்களோடு கூடிய, तैः - அந்த अवयवैः - அவயவங்களினுல், द्योतसे - (நீ) ஒளியுடன் இலங்குகின்றுய் அன்றோ!" என்பது அச் செய்யுளின் தாதபர்யம்.

"விச்வரூபஸ்ய தேடங்காநி ஸர்வமந்த்ராதி தேவதா:
அத:ஸம்ஜாதமந்த்ரைஸ்தைர்த்யோதஸேடவயவைரிதி."

—ஓ மஹாகணபதே! உலக வடிவாயமைந்த உன்னுடைய அவயவங்கள் யாவும் எல்லா மந்த்ரங்களுக்கும்

தலைமை பூண்ட தேவதைகளாகத் திகழ்கின்றன. ஆதலின் தோற்றுவிக்கப் பெற்ற மந்த்ரங்களோடு கூடிய அவயவங்களினால் நீ விளங்குகின்றாய் அன்றோ!" என்பது அச் செய்யுளுடைய பொருளாகும்.

எனவே ஏழு கோடி மஹா மந்த்ரங்களில் ஒவ்வொரு மூல மந்த்ரத்திலும், மாலாமந்த்ரம் (1) ந்யாஸம் (2) ஆவாஹநம் (3) த்யாநம் (4) மாலா (5) கவசம் (6) தன்ம் (7) அர்சனம் (8) கீலகம் (9) அஷ்டோத்தரம் (10) ஸஹஸ்ரநாமம் (11) ஸ்தோத்ரம் (12) எனப் பன்னிரெண்டு அங்கங்கள் இருக்கின்றன.

இவைகளில் அஷ்டோத்தரம், ஸஹஸ்ரநாமம், ஸ்தோத்ரம் என்ற இம் மூன்றையும் நீக்கி, எஞ்சியுள்ளவைகளான ஒன்பது அங்கங்கள் என்பது எல்லோருக்கும் இசைவானது எனபது ப்ரஸித்தம். ஏனெனில் இவைகள் மூன்றும் துதிகளில் அடங்கியுள்ளதால் என்க. மற்ற ஒன்பதையும் 'நவாங்கம்' என வ்யவஹாரம் செய்வதையும் நாம் காணலாம்.

சில தந்தரங்களைப் புனைந்த மஹர்ஷிகளுடைய அபிப்பிராயத்தில் மாலாமந்த்ரத்தை விடுத்தும், மற்றும் சிலருடைய கொள்கையில் ஆவாஹநத்தை யகற்றியும் நவாங்கம் எனக் கல்பனை செய்யப் பெற்றுள்ளது.

இதற்குக் காரணம் வருமாறு — ஆவாஹநமென்பது பத்ததியிலும் மாலா மந்த்ரமென்பது படலத்திலும் அடங்கியுள்ளது என்பதேயாகும். மற்றும், புருஷ தேவதா மந்தரங்கள் பஞ்சாங்கங்களை (ஐந்து அங்கங்கள்) கொண்டவை எனவும், ஸ்த்ரீதேவதா மந்தரங்களில் சில நவாங்கங்கள் (ஒன்பது அங்கங்கள்) கொண்டவை எனவும் காணப் பெறுகின்றன. எல்லா ஸ்த்ரீ தேவதைகளுக்கும் நவாங்கங்கள் கல்பனை செய்யப் பெறவில்லை.

மேலும் ஒரு தேவதையைக் குறித்துச் சொல்லுகின்ற மந்த்ரத்திற்குக் கல்பம் என்பது பெயர். அது வேதாங்கமாயுள்ள ஆறு சாஸ்தரங்களில் ஒன்றாகும். ஒரு கல்பத்தில்; பத்ததி, படலம், ப்ரயோகம், கவசம், ஸஹஸ்ரநாமம் என ஐந்து அங்கங்கள் இருக்கின்றன. அக் காரணத்தால் கல்பசாஸ்தரம் பஞ்சாங்கம் (ஐந்து அங்கம்) எனவும் சொல்லப் பெறும்.

பத்ததியில் [1] — ப்ராத: ஸ்மரணம் (1) ஸ்நாநவிதி (2) ஆசமநம் (3) ஸூர்யார்க்யம் (4) த்வாரதேவதா பூஜை (5) சக்ரலேகநம் (6) பீடந்யாஸம் (7) பூதசுத்தி (8) ப்ராணப்ரதிஷ்டா (9) ரிஷி (10) ச்சந்தஸ் (11) முதலியவைகளுடைய ந்யாஸங்கள் என்ற இவைகளும், வேறு சில கொள்கைகளைத் தழுவி த்யாநங்கள், பீடதேவதைகளுடைய பூஜை, ஆவரணதேவதைகளுடைய பூஜை, மூர்திகளுடைய பூஜை, தர்பணம், ஹோமம் பலிவிதாநம் என்ற இவைகளுடைய முறைகளும் அடங்கியுள்ளன.

ப்ரயோகத்தில் — வச்யம், ஆகர்ஷணம், வித்வேஷணம், உச்சாடநம், மோஹநம், பேதநம், மாரணம், ஸாரஸ்வதம் சாரந்தி என்ற அங்கங்கள் அடங்கியுள்ளன. இவைகளில்

---

1 "पद्धतिर्देवताशिर:" "பத்ததிர்தேவதாசிர:— பத்ததியென்பது தேவதையினுடைய சிரஸாகும்." "पटलं देवतागात्रम्" "படலம் தேவதாகாத்ரம்" படலமென்பது தேவதையினுடைய சரீரமாகும்" எனவும் குலார்ணவதந்த்ரம் சொல்லும். படலமென்பது पाटयति - दीपयते" "பாடயதி தீபயதே" — ஒளியுடன் இலங்குவது என்பது பொருள்.

மோஹநத்தை வச்யத்திலும், பேதநத்தை வித்வேஷணத்திலும் அடங்கியதாகக் கொண்டு எட்டு அங்கங்களாகவும் கணக்குச் செய்வார்கள்.

எனவே இவைகளுடைய விஸ்தாரமாயுள்ள விளக்கங்களை வரையப் புகுந்தால் நூல் பெருகி விடும். இளமதியெழுதிய அன்பர்களாம் வாசகர்களுக்குத் தாரணை செய்வதற்கும் சிரமமாயிக்கும் எனக் கருதி இத்துடன் இவ்விஷயம் முடித்துக் கொள்ளப் பெறுகின்றது.

— 0 —

ஆகவே நாம் தினந்தோறும் ஸர்வஸாதாரணமாக ஜபம் செய்யும் பொழுது கவசம், ரிஷி, ச்சந்தஸ், தேவதா என்ற இவைகளை அனுஸ்நதாநம் செய்து வருவதால், இவைகளுக்குரிய விளக்கங்களை யுணர்ந்து கொள்ளுவதும் அவசியமாகின்றன. ஆதலால் அவைகளுக்கும் இவ்விடத்தில் வாசகர் உணர்ந்து கொள்ளும் வகையான் சிறிது பொருள் விளக்கமும் கொடுக்க முயற்சி செய்யப் பெறுகின்றது.

(க) முதலாவதாக கவசத்தின் பொருள் விளக்கம் கொடுக்கப் பெறுகின்றது—

कवच: - கவச: - கம்: சரீரம் வஞ்சதி - பகைவர்களால் ஏவப் பெற்ற பாணங்களைத் தடுத்து சரீரத்தைக் காப்பாற்றுவது என்பது அச்சொல்லின் விளக்கமாகும். அமரகோசத்தில்—

" उरच्छद: कङ्कटको जागर: कवचोऽस्त्रियाम् "

"உரச்சத: கங்கடகோ ஜாகர: கவசோऽஸ்த்ரியாம்"

—உரச்சத: , கங்கடக: , ஜாகர: என்ற இம் மூன்று சொற்களும் கவசத்தைக் குறிப்பன. இவைகள் ஆண் பால், ஒன்றன் பால் இவைகளில் வருவன" எனச் சொல்லியுள்ளது.

அதாவது சரீரத்தை காப்பாற்றுவதற்குரியது என்பது பொருள். போருக்குச் செல்லுகின்ற வீரர்கள் எவ்வாறு தங்களது சரீரத்தைக் காத்துக் கொள்ளுவதற்கு இரும்பாலாகிய சட்டையை (கவசம்) அணிந்து கொள்ளுகின்றரோ, அவ்வாறே ஸாதகனுகிய வீரனும் தனது சரீரத்தைக் காத்துக் கொள்வதற்கு மந்த்ரத்தினுலான கவசத்தையும் அணிந்து கொள்வது அவசியமாகும்.

இதற்குச் சான்று—

" यथा शस्त्रप्रहाराणां कवचं प्रति वारणम् ।

तथा दैवोपघातानां शान्तिर्भवति वारणम् ॥ "

यथा - எவ்வாறு शस्त्रप्रहाराणाम् - ஆயுதத்தினுல் தாக்கப் பெறுகின்றவர்களுக்கு कवचम् - கவசத்தை. प्रति - குறித்து वारणम् - தடுக்கப் பெற்றதாயமைந்துள்ளதோ, तथा - அவ்வாறே, दैवोपघातानाम् - தேவதைகளுடைய தொடர்பால் தோன்றிய இடையூறுகளை, वारणं प्रति - தடுப்பதைக் குறித்தும் அமைந்துள்ளது. शान्ति: - அமைதியாயும், भवति - இருக்கின்றது.

"யதா சஸ்த்ர ப்ரஹாராணும் கவசம் ப்ரதி வாரணம்.
ததா தைவோபகாதாநாம் சாந்திர் பவதி வாரணம்"

—எவ்வாறு ஆயுதங்களினுல் தாக்கப் பெறுகின்றவர்களுக்கு கவசமானது (சட்டை) தடுத்து நிறுத்துவதற்குக் காரணமாயமைந்துள்ளதோ, அவ்வாறே உபாஸகனுக்கு, தேவதைகளுடைய தொடர்பால் தோன்றிய இடையூறுகளைத் தடுத்து நிறுத்துவதற்கும் இந்த மந்த்ர கவசமும் காரணமாயமைந்து, சாந்தியையும் தோற்றுவிப்பது" என்பது அச் செய்யுளுடைய தாத்பர்யம்.

மற்றும் - "कवचं देवतानेत्रे," "கவசம் தேவதா தேத்ரே - கவசமானது தேவதையினுடைய இரண்டு கண்

களாகும்." "कच ग्रहणे" "கச க்ரஹணே" "कच बन्धने" "கச பந்தநே" என்ற வினைச் சொல்லிலிருந்து இவை தோன்றின.

"कचग्रहण इत्यस्माद् धातोः कवचसंग्रहः"

"பிசக்ரஹண இத்யஸமாத் தாதோ: கவசஸம்க்ரஹ:"

—"கசக்ரஹண" என்ற இந்த வினைச் சொல்லிலிருத்து கவசம் என்ற சொல் ஸம்க்ரஹம் (எடுப்பது) செய்யப் பெற்றுள்ளது" என குலார்ணவதந்த்ரம் கூறும்.

अपि च तन्त्रेषु —

"लोहादिवद् अङ्गादिरक्षार्थं देवतामन्त्रविग्रहवत् ।

तत्तु पूजायां पाठ्यम्; भूर्जे लिखित्वा कण्ठे धार्यम्" इति ।

लोहादिवत् - இரும்பு முதலியவைகள் போல, अङ्गादि - அவயவங்கள் முதலியவைகளுடைய, रक्षार्थम् - காப்பாற்றுவதின் பொருட்டு, देवतामन्त्रविग्रहवत् - தேவதைகளுடைய மந்த்ர வடிவாய்மைந்த சரீரத்தை பாது காப்பாற்றுவதற்கும், तत् तु - அந்தக் கவசத்சை யோவெனில், पाठ्यम् - படிக்கப் பெறவேண்டும். भूर्जे - பூவரசன் பட்டையில், लिखित्वा - எழுதி, कण्ठे - கழுத்தில், धार्यम् - தாரணம் செய்து கொள்ள வேண்டும்" என்றவாறு.

மேலும் தந்த்ரங்களில்—

"லோஹாதிவத் அங்காதிரக்ஷார்த்தம் தேவதாமந்த்ர—
விக்ரஹவத்; தத் து பூஜாயாம் பாட்யம், பூர்ஜே லிகித்வா
கண்டே தார்யம்" இதி.

—அவயவங்களுடைய (உருப்புக்கள்) ரக்ஷையின் பொருட்டு எவ்வாறு இரும்பு முதலியவைகளாலான கவசம் அணியப் பெறுகின்றதோ, அது போல தேவதையினுடைய மந்த்ர வடிவாய்மைந்த சரீரத்தைப் பாதுகாக்கவும் கவச

மந்த்ரம் இன்றியமையாததாகும். அக் கவசத்தையும் பூஜையில் (ஆராதநம்) படிக்கப் பெற வேண்டியதுமாகும். அதை பூவரசன் பட்டையில் எழுதி கழுத்தில் தாரணம் செய்து கொள்ள வேண்டும்.

அப்பொழுது அந்த மந்த்ரங்களுக்கு இடையூறுகளை விளைவிக்கின்ற துஷ்ட தேவதைகள் அந்த உபாஸகனை யடுத்து வருவதற்கும், அவனைத் தொடுவதற்கும் அச்சம் கொள்வனவாயிருக்கும். இதுவே கவசமந்த்ரத்தினுடைய ப்ரயோஜநமும், பெருமையுமாகும்.

மற்றும், சில கவச மந்த்ரங்களை பூஜையைத் தொடங்கு வதற்கு முன்பு ந்யாஸத்தின் முடிவிலும், மற்றும் சில கவச மந்த்ரங்களை பூஜையின் முடிவிலும் ஜபம் செய்ய வேண்டியது மரபாகும் எனவும் நூல்களில் கட்டளையிடப் பெற்றுள்ளன. ஏனெனில் ஒவ்வொரு தேவதையினுடைய கவசத்திலும் தனித் தனியாகவுள்ள ப்ரயோஜநமுள்ளது என்று கல்ப சாஸ்த்ரங்களிலும், புராணங்களிலும் காணப் பெறுகின்றன.

இவ்வாறு பூஜை, ஜபம் இவைகளுக்குக் கவச மந்த்ரத்தின் பாராயணம் முக்யமாயுள்ளது எனவும், இவ் விடத்தில் வலியுறுத்தப் பெற்றது என்பதையும் வாசகர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். கவசத்தின் இலக்கணமும், அதைப் பாராயணம் செய்ய வேண்டிய அவசியத்தையும் ஒருவாறு இவ் விடத்தில் விளக்கப் பெற்றுள்ளது.

இப் பொழுது இவ்விடத்தில் லகுஸபதசியினுடைய தொடக்கத்தில் சொல்லப் பெற்றுள்ள மந்த்ரம், ரிஷி, ச்சந்தஸ், தேவதை என்ற இவைகளுடைய பொருள் விளக்கம் கொடுக்கப் பெறுகின்றது. முதலாவதாக மந்த்ரமென்பது. இச் சொல்லின் விளக்கம் வருமாறு—

"मकारं मननं प्राहुस्त्रकारं त्राण उच्यते ।
मननत्राणसंयुक्तो मन्त्र इत्यभिधीयते ॥

मकारम् - மகாரமானது, मननम् - மநநம் (சிந்தனை) என்பதைக் குறிப்பது; என, प्राहु: - சொல்லுகின்றனர். त्रकारम् - த்ரகாரமானது त्राण: காப்பாற்றுவது என, उच्यते - சொல்லப் பெறுகின்றது. मननत्राणसंयुक्त: - மநநம், த்ராணம் இவையிரண்டும் இணைந்தது. मन्त्र: - மந்த்ரம் என, अभिधीयते - சொல்லப் பெற்றது.

"மகாரம் மநநம் ப்ராஹுஸ்த்ரகாரம் த்ராண உச்யதே,
மநநத்ராணஸம்யுக்தோ மந்த்த இத்யபிதீயதே"

"—மகாரம் என்ற சொல் மநநம் (சிந்தனை) என்பதைக் குறிப்பது எனச் சொல்லுவர். த்ரகாரம் என்பது த்ராணம்-காப்பாற்றுவது-என்ற பொருளைச் சொல்லும். எனவே மநநம் த்ராணம் என்ற இவ்விரு சொற்களும் இணைந்ததே மந்த்ரம் என முழுச் சொல்லாக இருப்பது என்பது பொதுவாக எல்லா நூல்களிலும் விளக்கம் காணப் பெறுகின்றது.

ஆயினும் விசேஷமாயுள்ள பொருள் விளக்கமானது த்ரிபுரா ஸித்தாந்தம் என்ற நூலில் கொடுக்கப் பெற்றுள்ளது வருமாறு—

"मकारो जीवसंज्ञः स्यात् त्रकारस्त्वात्मसंज्ञकः ।
जीवात्मसंज्ञयोरैक्यं मन्त्र इत्यभिधीयते ॥"

मकार: - மகாரமானது, जीवसंज्ञ: - ஜீவன் என்ற பெயரையுடையதாக; स्यात् - இருப்பது, त्रकार: - த்ரகாரமோ, तु - ஏனெனில் आत्मसंज्ञक: - ஆத்மா என்ற பெயரை யுடையது, जीवात्मसंज्ञयो: - ஜீவன் ஆதமன் என்ற இரண்டையும், ऐक्यम् - இணைப்பது, मन्त्र: - மந்த்ரம் என, अभिधीयते - சொல்லப் பெற்றது.

"மகாரோ ஜீவஸம்ஜ்ஞ: ஸ்யாத் த்ரகாரஸ்த்வாத்மஸம்ஜ்ஞக:
ஜீவாதமஸம்ஜ்ஞயோரைக்யம் மந்த்ர இத்யபிதீயதே"

"—மகாரம் ஜீவன் என்ற பெயரைக் குறிப்பது. த்ரகாரமானது ஆத்மன் என்ற பெயரைக் குறிப்பது. எனவே ஜீவன், ஆத்மன், என்ற இரண்டு சொற்கள் இணைந்ததே மந்த்ரம் எனச் சொல்லப் பெறுகின்றது" என்பது அச் செய்யுளுடைய தாத்பர்யமாகும்.

மற்றும் ருத்ரயாமளததில் கொடுத்துள்ள விளக்கம் வருமாறு—

"मकारं मानसं प्रोक्तं त्रकारं बुद्धिलक्षणम् ।
बुद्धिमानससंयोगो मन्त्र इत्यभिधीयते ॥"

मकारम् - மகாரமானது, मानसम् - மனத்தைச் சார்ந்தது என, प्रोक्तम् - சொல்லப் பெற்றது. त्रकारम् - த்ரகாரமானது, बुद्धिलक्षणम्: - புத்தியினுடைய இலக்கணமாயமைந்துள்ளது. बुद्धिमानससंयोग: - புத்தி, மனச்சார்பு இவைகளுடைய இணைப்பானது, मन्त्र: - மந்த்ரம், इति - என்று अभिधीयते - சொல்லப் பெற்றது.

"மகாரம் மாநஸம் ப்ரோக்தம் த்ரகாரம் புத்திலக்ஷணம்,
புத்திமாதஸஸம்யோகோ மந்த்ர இத்யபிதீயதே."

"—மகாரம் மனத்தைச் சார்ந்தது எனச் சொல்லப் பெற்றது. த்ரகாரமானது புத்தியினுடைய இலக்கணத்தைச் சொல்லுவது எனவே புத்தியைச் சார்ந்ததும், மனத்தைச் சார்ந்ததுமே மந்த்ரம் என்று சொல்லப் பெற்றது" என்பது அச் செய்யுளுடைய பொருளாகும்.

இவ்வாறு மந்த்ரமென்னும் சொல்லின் விளக்கம் சொல்லப் பெற்றது.

—0—

(2) இரண்டாவது ரிஷி என்ற சொல்லாகும். இச் சொல்லின் இலக்கணம் வருமாறு—

"ऋषिश्छन्दश्च बीजं च कीलकं शक्तिरेव च ।
अङ्गन्यासस्ततो ध्यानं मन्त्राङ्गानां च सप्तकम् ॥"

ऋषि: - ரிஷியும், छन्द: च - ச்சந்தஸும், कीलकम् - கீலகமும், शक्ति: - एव - च - சக்தியும், तत: - பிறகு, ध्यानं च - சிந்தனையும், अङ्गन्यास: च - அவயவங்களுடைய ந்யாஸமும், मन्त्राङ्गनाम् - மந்த்ரங்களுடைய அவயவங்களுக்கு सप्तकम् - ஏழு அங்கமாகும்.

"ரிஷிஸ்ச்சந்த: ச பீஜம் ச கீலகம் சக்திரேவ ச
அங்கந்யாஸஸ்ததோ த்யாநம் மந்த்ராங்காநாம் ச ஸப்தகம்"

—ரிஷி, ச்சந்தஸ், பீஜம், கீலகம், சக்தி, அங்க ந்யாஸம், பிறகு த்யாநம் என்ற இந்த ஏழும் மந்த்ரங்களுடைய அங்கங்களாவன" என்பது அச் செய்யுளுடைய பொருள்.

ऋषि; - ரிஷி: - ऋषति - ரிஷதி - கச்சதி - (செல்லுவது) सर्वान् - எல்லா, मन्त्रान् - மந்த்ராந்- மந்த்ரங்களையும், ज्ञानेन - ஞாநேந - ஞாநத்தினால், पश्यति - பச்யதி - பார்க்கிறான், संसारपारं वा - ஸம்ஸாரபாரம் வா - பிறவியென்னும் கடலின் கரையை என்றுவது - அதாவது எல்லா வகையான மந்த்ரங்களையும் தனது ஞாநத்தின் பெருமையால் உணருகின்றவன், அல்லது அடைகின்றவன் அல்லது பிறவிக்கடலின் கரையைக் காண்பவன்" என்பது அச் சொல்லின் விளக்கமாகும்.

"ऋकार: सृष्टिसंज्ञ: स्यात् षिकार: स्थितिसंज्ञक: ।
सृष्टिस्थितिभ्यां संज्ञेयं मन्त्रविद्भिरुदाहृतम् ॥"

ऋकार: - ரிகாரமானது, सृष्टिसंज्ञ: - தோன்றத்தின் பெயராக, स्यात् - இருப்பது. षिकार: - ஷிகாரமானது, स्थितिसंज्ञक: - நிலையின் பெயரையுடையதாக இருக்கிறது. सृष्टिस्थितिभ्याम् - தோற்றம், நிலை இவைகளுடைய इयम् - இது संज्ञा - பெயர் என்று मन्त्रविद्भि: - மந்த்ரத்தை யுணர்ந்தவர்களினால், उदाहृतम् - சொல்லப் பெற்றுள்ளது.

"ரிகார: ஸ்ருஷ்டிஸம்ஜ்ஞ: ஸ்யாத்
ஷிகார: ஸ்திதிஸம்ஜ்ஞக:
ஸ்ருஷ்டிஸ்திதிப்யாம் ஸம்ஜ்ஞேயம்
மந்த்ரவித்பிருதாஹ்ருதம்"

"ரிகாரம் தோற்றத்தை (ஸ்ருஷ்டி) சொல்லும். ஷிகாரம் நிலையைச் சொல்லும். (ஸ்திதி) தோற்றம், நிலை என்ற இவ்விரண்டையும் அச் சொல் சுட்டி நிற்பது என்பது" என மஹர்ஷிகளாம் மந்த்ரங்களையுணர்ந்தவர்களால் சொல்லப் பெற்றுள்ளது.

மற்றும் இச் சொல்லின் விளக்கங்களை வேதங்கள், புராணங்கள், நிருக்தம், தந்த்ரங்கள் முதலியவைகளில் விஸ்தாரமாகக் காணலாம். எனவே ஞாநம், ஸம்ஸாரம் - பிறவி - இவைகளுடைய கரையை (எல்லை) தனது ஞானத்தின் உதவியினால் உணர்ந்துள்ளவன் ரிஷி எனச் சொல்லப் பெறுகின்றன என்பது ஸாரம்.

— 0 —

(3) மூன்றுவது ச்சந்தஸ், இச் சொல்லின் விளக்கம் வருமாறு— "छदि आह्लादे - ச்சதி ஆஹ்லாதே" என்ற வினைச் சொல்லிலிருந்து இது தோன்றியது. அதாவது - எல்லா வஸ்துக்களையும் மகிழச் செய்வது, வேதம் என்பது ஸாரம். ச்சந்தயதி மகிழச் செய்வது என்பது ஸமாஸம், (சொற்களின் இணைப்பு) அதாவது வேதங்களுடைய அபிப்ராயத்தோடு கூடிய அக்ஷரங்களுடைய எண்ணிக்கைகள் கொண்ட மூலமந்த்ரம் என்பது பொருள்.

Scanned by CamScanner

இதற்குச் சான்று—

"छकारः पदसंज्ञः स्याद् दकारस्याभिलाषकः ।

पदाभिलाषसंज्ञः तत् छन्दः सद्भिरुदाहृतम् ॥"

छकारः - ச்சகாரமானது, पदसंज्ञम् - பதம் என்ற பெயரையுடையதாக, स्यात् - இருப்பது. दकारस्य - தகாரத்திற்கு अभिलाषकः - விருப்பம் என்பது பொருள். पदाभिलाषसंज्ञः - பதம், விருப்பம் என்ற பெயரையுடையது तत् - அந்த, छन्दः - ச்சந்தஸ் என்ற சொல். सद्भिः - சான்றோர்களால் उदाहृतम् சொல்லப் பெற்றுள்ளது.

"ச்சகார: பதஸம்ஜ்ஞ:ஸ்யாத் தகாரஸ்யாபிலாஷக:

பதாபிலாஷஸம்ஜ்ஞம் தத்ச்சந்தஸ் ஸத்பிருதாஹ்ருதம்"

"—ச்சகாரம் என்ற சொல் பதத்தைச் சொல்லும். பதம் - ஸ்தானம் - இருப்பிடம் என்பது பொருள். எனவே இருப்பிடம், விருப்பம் என்ற இரண்டு பொருளையும் கொண்டு விளங்குவது ச்சந்தஸ் என்ற சொல் என்பது தாதபர்யம்.

— 0 —

அடுத்தது தேவதை - இச் சொல்லின் விளக்கம் வருமாறு— 'दिव्' 'திவ்' என்ற வினைச் சொல்லிலிருந்து தோன்றியது இச் சொல். அச் சொல்லுக்கு - 'दिवु क्रीडा - विजिगीषा - व्यवहार - कान्ति - मोद - मद - स्वप्न - स्तुति - गतिषु - " "தீவு, க்ரீடா, விஜிகீஷா, வ்யவஹார, காந்தி, மோத, மத, ஸ்வப்ந, ஸ்துதி - கதிஷு" - என்பது முழுமையான பாணிநி ஸூத்ரமாகும். இந்த ஸூத்ரத்தினுடைய பொருள் வருமாறு— ஒளி, (1) விளையாடுதல், (2) வென்றி கொள்ளல் (3) கொடுக்கல் வாங்கல், (4) காந்தியுடன் இலங்குவது, (5) மகிழ்ச்சியடைதல், (6) மதத்தைப் பெருகச் செய்வது, (7) ஸ்வப்நம் காணுதல் (8) செல்லுதல் - நடத்தல், (9)

என்ற இப் பொருட்களைக் கொண்ட சொற்களிலும் இந்த வினைச்சொல் வருவதாகும்.

இவ்விடத்தில் 'த்யுதி' 'க்ரீடாவா' தநோதி - செய்கிறவள், या - யா - எவளோ, सा - ஸா - அவள், देवता - தேவதா - அதாவது देव एव - தேவஏவ தேவதா - देवं द्युति क्रीडां वा - தேவம் த்யுதிம் க்ரீடாம் வா - ஒளியையாவது, விளையாட்டையாவது செய்கின்றவள் என்பது தாதபர்யம்.

மற்றும்—

"या यस्याभिमता पुंसः सा हि तस्यैव देवता ।

किं तु कार्यविशेषेण पूजिता चेष्टदा नृणाम् ॥"

यस्य - எந்த पुंसः - உபாஸகனுக்கு, या - எந்த தேவதையானது, अभिमता - விருப்பமுள்ளதாயிருக்கின்றதோ, सा हि- அந்த, देवता- தேவதையாயிருப்பவள், हि- ஹி- அன்றோ! किं तु - ஆனால், नृणाम् - மனிதர்களுக்கு, कार्यविशेषेण - கார்ய விசேஷத்தினால், पूजिता - பூஜிக்கப் பெற்றவளாக, इष्टा च - விரும்பியதைக் கொடுப்பவளுமாவாள்.

"யா யஸ்யாபிமதா பும்ஸ: ஸாஹிதஸ்யைவ தேவதா.

கிம் து கார்யவிசேஷேண பூஜிதா சேஷ்டதா ந்ருணாம்."

—எந்த உபாஸகனுக்கு எந்த தேவதை ப்ரியமுள்ளவளாயிருக்கின்றனளோ, அவளன்றோ அவனுக்குத் தேவதையுமாவள். ஆயினும் காரிய விசேஷத்தோடு மனிதர்களுக்கு, ஆராதனை செய்யும் பொழுது விரும்பியதைக் கொடுப்பவளாகவும் அவள் இருப்பவள்" எனவும் சொல்லப் பெற்றுள்ளது இவ்விடத்தில் சிந்தனை செய்யத் தக்கதுமாகும்.

அடுத்தது பீஜம். இச் சொல்லின் விளக்கம் வருமாறு—

" बीजं कारणमर्थानां जगन्निर्माणकारणम् "

Scanned by CamScanner

वर्णानाम् - ப்ரயோஜனமாயுள்ள வஸ்துக்களுக்கும், बीजम् - பீஜமானது कारणम् - காரணமாயமைந்துள்ளது जगन्निर्माणकारणम् - உலகத்தின் நிர்மாணத்திற்கும் அது காரணமாயமைந்துள்ளது.

"பீஜம் காரணமர்த்தாநாம் ஜகந்நிர்மாணகாரணம்"

பீஜமானது (விதை) ப்ரயோஜனமாயுள்ள வஸ்துக்களுக்கெல்லாம் காரணமாயமைந்திருப்பது. அது உலகத்தின் தோற்றத்திற்கும், மூல காரணமாயமைந்திருப்பதுமாகும்.

எவ்வாறு - ஆலின் ஒரு சிறிய விதையானது விரிந்துள்ள பெரிய மரத்தைத் தோற்றுவிப்பதற்குக் காரணமாயுள்ளதோ, அவ்வாறே இந்த பீஜமும் ஜபம் செய்கின்ற உபாஸகனுக்கு மந்த்ரத்திற்குரிய பயனை பெருகிய அளவிலே தோற்றுவிப்பது மாகும் என்பது அச் செய்யுளுடைய தாத்பர்யமாகும்.

— 0 —

அடுத்தது சக்தியாகும். शक्तिः - சக்தி - என்ற இச் சொலின் விளக்கம் வருமாறு - "शक्लृशक्तौ" "சக்லுசக்தௌ" என்ற வினைச் சொல்லிலிருந்து இச் சொல் தோன்றியது. அதற்கு, திறமை, பொறுமை, பலம், சௌர்யம், ப்ரபாவம், உத்ஸாஹம், மந்த்ரம் (ஆலோசனை) என்பன போன்ற பல பொருள்கள் இருக்கின்றன.

" वीर्यं तेजो बलं क्षेत्रं सर्वं तच्छक्तिरुच्यते "

वीर्यम् – வீர்யம், तेजः - ஒளி, बलम् - வலிமை, क्षेत्रम् - பூமி, सर्वम् – இவையாயும், शक्तिः - சக்தியென, उच्यते - சொல்லப் பெறுகின்றது என்பது ப்ரமாண வசநம்.

"வீர்யம் தேஜோபலம் க்ஷேத்ரம் ஸர்வம் தச்சக்திருச்யதே."

வீர்யம் ,தேஜஸ், பலம், (வலிமை) க்ஷேத்ரம் - (பூமி) இவை

யாவும் சக்தி என்ற சொல்லால் சுட்டிக்காட்டப்பெறுகின்றது. இச்சக்தி பலவகையாகப் பிரிந்து ஒவ்வொரு செயல்களினூடே மறைந்து இருந்து கொண்டு அந்த அந்த செயல்களுடைய பயனை நிறைவேற்றுகின்ற தன்மை வாய்ந்ததுமாகும்.

"बिन्दुः शिवात्मकस्तत्र बीजं शक्त्यात्मकं स्मृतम् ।
तयोर्योगे भवेन्नादस्तेभ्यो जातास्त्रिशक्तयः ॥"

"பிந்து: சிவாத்மகஸ்தத்ர பீஜம் சக்த்யாத்கமம் ஸ்ம்ருதம், தயோர் யோகே பவேந்நாதஸ்தேப்யோஜாதாஸ்த்ரிசக்தய:

—அவ்விடத்தில் பிந்துவானது சிவ வடிவம் கொண்டதாகும். பீஜமானது சக்தியின் வடிவத்தைக் கொண்டது. இவ்விரண்டினுடைய இணைப்பிலிருந்தே நாதமும் தோன்றுவது. இந்த மூன்றுகளிடத்திலிருந்து மூன்று வகையான சக்திகளும் தோன்றின எனச் சொல்லப்பெறும்." என க்ரியாஸாரம் சொல்லும்.

அத்தகைய மூவகையாயுள்ள சக்திகளைக் குறித்து இவ்விடத்தில் சிறிது விளக்கம் கொடுக்கப் பெறுகின்றது -

"इच्छा क्रिया तथा ज्ञानं गौरी ब्राह्मी तु वैष्णवी ।
त्रिधा शक्तिः स्थिता यत्र तत्परं ज्योतिरोमिति ॥"

"இச்சா க்ரியா ததா ஞாதம் கௌரீ ப்ராஹ்மீ து வைஷ்ணவீ.
த்ரிதா சக்தி: ஸ்திதா யத்ர தத்பரம் ஜ்யோதிரோமிதி".

—இச்சை, க்ரியா, ஞாதம் என்ற மூன்று சக்திகளும் முறையே கௌரீ, ப்ராஹ்மீ, வைஷ்ணவீ எனவும் இருப்பன.

எவ்விடத்தில் இந்த மூன்று சக்திகளுக்கும் அப்பால் ப்ரணவமென்ற பேராளியுள்ளதோ '' என்று கோரக்ஷஸம்ஹிதை சொல்லும்.

வாராஹபுராணத்தில் இந்த மூன்று சக்திகளுடைய இலக்கணம் பின் வருமாறு உருவகம் செய்யப் பெற்றுள்ளது —

"एषा विशक्तिरुद्दिष्टा नयसिद्धान्तगामिनी ।
एषा श्वेता परासृष्टिः सात्त्विकी ब्रह्मसंस्थिता ॥"

"ஏஷாத்ரி சக்திருத்திஷ்டா நயஸித்தாந்தகாமிநீ.
ஏஷா ச வேதா பரா ஸ்ருஷ்டி: ஸாத்விகீ ப்ரஹ்மஸம்ஸ்திதா."

— சாஸ்த்ரங்களுடைய முடிவை அறுதியிட்டுச் சொல்லுகின்ற இப்பெருமைவாய்ந்தவர்கள் மூன்று சக்திகளுமாவர். இவர்களில் ப்ரஹ்மனிடத்தில் நிலைத்துள்ள இந்த வெண்மை நிறம் பொருந்திய சிறந்தவள் ஸாத்விகீ சக்தியென்பவள். இவள் தோற்றத்திற்குக் காரணமாயிருப்பவள். ஸ்ருஷ்டி சக்தியெனவும் இவளை அழைபார்.

"एषा रक्ता राजसी तु वैष्णवी परिकीर्तिता ।
एषा कृष्णा तामसी तु रौद्री देवी प्रकीर्तिता ॥"

"ஏஷா ரக்தா ராஜஸீ து வைஷ்ணவீ பரிகீர்திதா.
ஏஷா க்ருஷ்ணா தாமஸீ து ரௌத்ரீ தேவி ப்ரகீர்திதா."

—"சென்னிறம் பொருந்திய இப்பெருமை வாய்ந்த ராஜஸீ என்ற சக்தியானவள் வைஷ்ணவீசக்தி எனவும் அழைக்க பெறுபவள். கருமைநிறம் பொருந்திய இப்பெருமை வாய்ந்த தாமஸீ என்ற சக்தியானவள் ரௌத்ரீசக்தி எனச் சொல்லப் பெறுபவள்''.

"परमात्मा यथा देवो एक एव त्रिधा स्थितः ।
प्रयोजनवशाच्छक्तिरेकैव त्रिविधाभवत् ॥"

"பரமாத்மா யதா தேவோ ஏக ஏவ த்ரிதாஸ்தித.'
ப்ரயோஜநவசாச்சக்திரேகைவ த்ரிவிதாபவத்." இதி ;

—எவ்வாறு ஒளியுடன் இலங்கும் பரமாத்மன் ஒருவனே மூவகையாக இருக்கின்றானோ. அதேபோல ஒரே சக்தியானவள் காரியவசத்தால் மூவகையாகவும் இருப்பவள்" என்றவாறு.

இவ்வாறு சக்தி என்ற சொல்லின் விளக்கம் சொல்லப் பெற்றது. இந்த சக்தியினுடைய செயல்களின் விரிவான விளக்கங்களை எமது சக்திமந்தரவிளக்கம், தேவீமாஹாத்மயம் போன்றவைகளில் காணலாம்.

அடுத்தது கீலகம்—कीलकम् - இச்சொல்லின் விளக்கம் வருமாறு—

"कील बन्धने" "கீல பந்தநே" என்பது தாது. அச்சொல் 'கட்டுப்படுத்தல்' என்ற பொருளைச் சுட்டி நிற்பது. அதாவது பொதுவாக, கொட்டிலில் கட்டப் பெற்றுள்ள மாடுகளுக்குச் சொறிந்துகொள்ள அக்கொட்டிலின் உள்ளே நட்டுவைத்துள்ள மரத்தாலாகிய தூணுக்குப் பெயர்.

ஆயினும் இவ்விடத்தில் அச்சாணி, (உருளை) கடையாணி என்ற பொருளைச் சுட்டி நிற்பது. இதற்குச் சான்று வருமாறு—

Scanned by CamScanner

"तस्माद्रथाङ्गनेमीति कीलकं तच्च कीलितम्"

"தஸ்மாத் ரதாங்க நேமீதி கீலகம் தச்ச கீலிதம்."

—ஆகையினால் ரதத்தினுடைய (தேர்) அவயவமாயுள்ள நேமி (சக்கரம்) யினுடைய இருபகுதிகளையும் இணைப்பதால் கீலகம் எனச் சொல்லப் பெற்றது. அதாவது இந்த அச்சாணியும், - கடையாணியும் - ரதத்தைச் செலுத்துவதற்கு ஆதாரமாயமைந்துள்ளது. இவைகள் இல்லாவிடில் ரதமானது ஓடாது.

அதுபோல உபாஸகனுடைய புத்தியையும், மனதையும் ஒன்றாக இணைத்து, ஈசன் பால் நிலை நிறுத்துவதற்குத் துணையாயிருப்பது இந்தக் கீலகமென்பது. வேதங்களிலும் இந்த அச்சையே கீலகம் எனச்சொல்லப் பெறுவதுமாகும். அவ்விடத்தில் "ब्रह्मण आणीस्थः" "ப்ரஹ்மண ஆணீஸத:" எனவும் வ்யவஹாரம் செய்யப் பெறுகின்றது இச்சொல்லின் விரிவான விளக்கங்கள் எமது ஸௌபாக்யலக்ஷ்ம்யுபநிஷத்தின் சரந்திபாடத்தில் கொடுக்கப் பெற்றுள்ளன. அங்கு கண்டு தெளிந்து கொள்ளலாம்.

———

இதுவரையில் மந்த்ரம், ரிஷி, சசந்தஸ் தேவதை, பீஜம், சக்தி, கீலகம், என்றவைகளுக்குச் சுருக்கமாக விளக்கம் கொடுக்கப் பெற்றது. இனி இதற்கு அடுத்தது ந்யாஸம் என்பதாகும். அச்சொல்லின் விளக்கமும் கொடுக்கப் பெறுகின்றது—

नि - अस् - 'நி-அஸ்' -நி என்ற உபஸர்கமும், "अस भुवि" "அஸபுவி" என்ற தாதுவும் இணைந்தது ந்யாஸம் என்ற சொல். அச்சொல்லுக்கு நன்கு கொண்டு செல்வது - நன்கு வைப்பது என்பது பொருள். இச்சொல் வேதங்களில் பல விடங்களிலும் வருவதையும் காணலாம். மற்றும்—

"त्वङ्मांसरक्तसंयुक्तं शरीरमपवित्रकम् ।
न्यासेनानेन शुद्ध्यर्थमजस्रं न्यासमाचरेत् ॥"

"த்வங்மாம்ஸரக்தஸம்யுக்தம் சரீரமபவித்ரகம்.
ந்யாஸேநாநேந சுத்யர்த்தமஜஸ்ரம் ந்யாஸமாசரேத்"

—த்வக்-(தோல்) மாம்ஸம், ரக்தம் என்ற இவைகளோடு கூடிய இச்சரீரம் அசுத்தமானது. இதைச் சுத்தி செய்வதற்கு (இந்த ந்யாஸத்தினால்) எப்பொழுதும் சுத்தமாயிருப்பதற்காக இந்த ந்யாஸத்தைச் செய்து வர வேண்டும் என லக்ஷ்மீ ரத்நகோசம் சொல்லும். இவ்விடத்தில் 'அஜஸ்ரம்' என்ற சொல் 'இடைவிடாது' என்ற நிலையைக் குறிப்பாக உணர்த்துவது.

ध्यानम् - த்யாநம் - "ध्यै चिन्तायम्" "த்யை சிந்தாயாம்" என்ற தாதுவிலிருந்து இச்சொல் தோன்றியது. சிந்தனை என்பது அச்சொல்லின் பொருள். அதாவது மனத்தை ஒருமுகமாகக் குவியச் செய்து, தனது சிந்தனையிலே குறிக்கோளாயமைத்துக் கொண்ட வஸ்துவினிடத்தில் உறுதியுடன் அசைவற்று நிற்கின்ற மனத்தின் நிலையைச் சொல்லுவது.

இவ்வாறு மந்த்ரத்தின் நிறைவு கைவரப் பெறுவதற்குரிய ஏழு அங்கங்களுடைய (உறுப்புக்கள்) விளக்கம் ஒரு

Scanned by CamScanner

வாறு உணர்த்தப் பெற்றது. இதை நன்கு உணர்ந்து ஜபம் செய்து வரப்பழகினால் அளவு கடந்த பயன்களையும் பெற்று. தேவதைகளுடைய அருளுக்குத் தகுதியுள்ளவர்களாக நாம் இருக்கமுடியுமென்று நமது முன்னோர்களான மஹர்ஷி களுடைய மங்களாசாஸநமுமாகும்.

இப்பொழுது முன்பு சொல்லிய மந்த்ரம், ரிஷி, முதலி வவைகளுக்கு விசேஷமாயுள்ள பொருள் விளக்கங்கள் சொல்லப்பெறுகின்றன—

बीजम् - பீஜம் என்ற சொல் 'காரணம்' என்ற பொருளைச் சுட்டி நிற்பது. அதாவது மந்த்ரங்களுடைய தோற்றத் திற்கும் மூல காரணமாயிருப்பது என்பது.

யாமளத்தில்—

"देवतायाः शरीराणि बीजमुत्पद्यते ध्रुवम् "

"தேவதாயா : சரீராணி பீஜமுக்பத்யதே த்ருவம்"

—"தேவதைகளுடைய சரீரங்களை பீஜமானது தோற்று விப்பது இது உறுதி'' எனச் சொல்லியுள்ளது. சாரதா திலகத்தில்—

—"बीजं शक्तिं च पादयो: ''பீஜம் சக்திம் ச பாதயோ:''— 'பீஜம், சக்தி' என்ற இரண்டும் பாதங்களில் ந்யாஸம் செய்ய வேண்டும்'' எனச் சொல்லியுள்ளது.

யாமளத்திலோ—

"ऋषिं न्यसेन्मूर्ध्निदेशे छन्दस्तु मुखपङ्कजे ।
देवता हृदयेनैव बीजं तु गुह्यदेशके ।
शक्तिं तु पादयोश्चैव सर्वाङ्गे कीलकं न्यसेत् । "

"ரிஷிம் ந்யஸேத் மூர்த்நிதேசே ச்ச்ந்தஸ்து முகபங்கஜே.
தேவதா ஹ்ருதயேநைவ பீஜம் து குஹ்யதேசகே.
சக்திம் து பாதயோ:சைவ ஸர்வாங்கே கீலகம் ந்யஸேத். ''

சென்னியில் (சிரஸ்) ரிஷியையும், முகபங்கஜத்தில் ச்ச்ந்தனையும், ஹ்ருதயத்தில் தேவதையையும், பீஜத் தையோ வெனில் குஹ்யதேசத்திலும், சக்தியையோ வெனில், பாதங்களிலும், கீலகத்தை எல்லா அவயவங்களிலும் ந்யா ஸம் செய்ய வேண்டும்'' எனச் சொல்லியுள்ளது. முன்பு சொல்லப் பெற்ற சாரதாதிகலவசநத்தை பக்ஷாந்தரமென உணர வேண்டும்.

ஏனெனில்—உலக வழக்கில் எல்லோரும் பீஜத்தை வலது மார்பகத்திலும், சக்தியை இடது மார்பகத்திலும், கீலகத்தை இவையிரண்டுக்கும் இடையேயுள்ள மார்பகத்திலும் ந்யாஸம் செய்வதை நாம் ஸர்வஸாதாரணமாகக் காணலாம். இதற் குரிய ப்ரமாணவசனம் எங்கேயுள்ளது என்பதையும் காண முடியவில்லை.

'கீலகம்' என்ற சொல்லானது — " वह्नेर्द्वयोर्ज्वालकीलौ '' வஹ்நெர்த்வயோர் ஜ்வாலகீலௌ'' என அமரகோசம்

சொல்லும். அதற்கு மந்த்ரத்தன்மை வாய்ந்த தேவதையினுடைய ஜ்வாலையென்பது பொருள். இவ்விடத்தில் 'கீலகம்' என்றதிலுள்ள ககாரமானது ஸ்வார்த்தத்தில் (தன்னைச் சார்ந்தது) என்ற பொருளில் வழங்கப்பெறுவது. பொதுவாக, " कील: " கீல: என்ற சொல்லானது " कील बन्धने " "கீல பந்தநே" என்ற தாதுவானது (வினைச்சொல்) 'கட்டுப்படுத்துவது' என்ற பொருளைச் சுட்டி நிற்பது.

எனவே முறைபாக—ரிஷியைச் சென்னியில் பரமஹம்ஸ குருவாகவும், ச்சந்தஸை ஸூஷும்னையின் நுனியிலும், (நாசியின் நுனி) தேவதையை ஹ்ருதயத்திலும், பீஜம், சக்தி இவ்விரண்டையும் பாதங்களுடைய நுனிகளிலும் ந்யாஸம் செய்ய வேண்டும்.

मम - மம - इति - இதி என்னுடையது என்றது— அச்சொல்லின் ப்ரயோஜநமானது — இவ்வாறு ஸம்கல்பம் செய்துகொண்டுள்ள நான் செய்யப் போகிற ஜபத்தினால் எனக்கு எல்லா விழைவுகளும் (விருப்பம்) ஈசனது அருளால் நிறைவேற வேண்டும் என மனத்திலே அசையாத உறுதியைத் தோற்றுவித்துக் கொள்ளுவதேயாகும்.

இதற்குப் பிறகு ஷடங்கந்யாஸம் என்பது — அது வருமாறு—ஹ்ருதயம், சிரஸ், சிகை, கவசம், அஸ்த்ரம், வௌஷட்—இது நேத்திரதற்குரிய சொல்—என்பன. இவைகளுக்குரிய இலக்கணம் யாது என்பது விளக்கப்பெறுகின்றது.

ருத்ரயாமளத்தில் —

"हृदयं मध्यमाभ्यां च तर्जनीभिः शिरः स्मृतम् ।
मध्यमातर्जनीभ्यां स्यादङ्गुष्ठेन शिखा स्मृता ॥
दशभिः कवचं प्रोक्तं तिसृभिर्नेत्रमीरितम् ।
प्रोक्ताङ्गुलीभ्यां मन्त्रं स्यादङ्गक्लृप्तिरियं स्मृता ।"

"ஹ்ருதயம் மத்யமாப்யாம் ச தர்ஜநீபி: சிர: ஸ்ம்ருதம்.
மத்யமாதர்ஜநீப்யாம் ஸ்யாத் அங்குஷ்டேந சிகா ஸ்ம்ருதா.
தசபி: கவசம் ப்ரோக்தம் திஸ்ருபிர் நேத்ரமீரிதம்.
ப்ரோக்தாங்குலீப்யாம் மந்த்ரம் ஸ்யாத்
அங்கக்லுப்திரியம் ஸ்ம்ருதா"

— இரண்டு கைகளுடைய நடுவிரல்களைச் சேர்த்துக் கொண்டு ஹ்ருதயமந்த்ரத்தையும், இரண்டு சுண்டுவிரல்களைச் சேர்த்துக் கொண்டு சிரோமந்த்ரத்தையும், நடுவிரல், சுண்டுவிரல், பெருவிரல் என்ற இம்மூன்றையும் இணைத்து சிகாமந்த்ரத்தையும், (சிகா - குடுமி) பத்து விரல்களினாலும் கவசமந்த்ரத்தையும், சுண்டுவிரல், நடுவிரல், மோதிர விரல் இவைகள் மூன்றையும் இணைத்து நேத்ரமந்த்ரத்தையும், இந்த விரல்களைக் கொண்டே அஸ்த்ரமந்த்ரத்தையும் அந்த அந்த இடங்களில் ந்யாஸம் (வைப்பு) செய்ய வேண்டும்" என்பது அச்செய்யுட்களுடைய தாத்பர்யம்.

ஸாதாரணமாக இப்பொழுது ஷடங்கந்யாஸம் செய்து வருகின்ற முறையில் இவைகளைத் தழுவிச் செய்யப் பெறுகின்றதா என்பது தெரியவில்லை.

யாமளத்தில் —

"हृदये हृदयाङ्गं तु शिरोऽङ्गं शिरसे तथा ।
शिखायां तु शिखा प्रोक्ता कवचं सर्वदेहके ।
नेत्रे नेत्रत्रयं प्रोक्तं दिशामस्त्रमुदीरयेत् ।"

ஹ்ருதயே ஹ்ருதயாங்கம் து சிரோங்கம் சிரஸே ததா.
சிகாயாம் து சிகாப்ரோக்தா கவசம் ஸர்வதேஹகே.
நேத்ரே நேத்ரத்ரயம் ப்ரோக்தம் திசாமஸ்த்ரமுதீரயெத்."

" ஹ்ருதயாங்கத்தை ஹ்ருத்யத்திலும், சிரோங்கத்தைச் சிரஸிலும், அவ்வாறே சிகாங்கத்தைச் சிகையிலும் எனச் சொல்லப் பெற்றது. கவசமோவெனில் எல்லா உறுப்புக்களிலுமாகும். நேத்ரத்தை, நேத்ரத்தில் எனவும் சொல்லப் பெற்றுள்ளது. அஸ்த்ரமானது எல்லா திக்குகளிலும் எனச் சொல்லப் பெற்றது — இவ்விடத்தில் 'திசாம்' என்றது அஸ்த்ரம்நதர்த்தினுல் சிரஸை சுற்றி 'அஸ்த்ராய பட்' எனச் சொல்ல வேண்டுமென்பது" பொருள்.

இவ்வாறு ஷடங்கந்யாஸத்தினுடைய ஸ்தாநங்கள் சொல்லப் பெற்றுள்ளன.

ஏனெனில் இப்பொழுது கவசமந்த்ரத்தை இரண்டு தோளிலும் வைப்பது மரபாயிருக்கின்றது.

"अस्त्रं तु तलयोर्न्यस्य कुर्यात् तालत्रयादिकम् ।
दिशास्तेनैव बध्नीयात् च्छोटिकाभिः समंततः ॥"

"அஸ்திரம் து தலயோர்ந்யஸ்ய குர்யாத் தாலத்ரயாதிகம்.
திசஸ்தேனைவ பத்நீயாத்| சேசாடிகாபி: ஸமம்தத :"

—அஸ்தர மந்திரத்தை உள்ளங்கை கொண்டு ந்யாஸம் செய்ய வேண்டும். அதாவது இரண்டு உள்ளங்கைகளினும் தட்ட வேண்டும். இவ்வாறு செய்து பத்து திக்குகளையும் கட்டுப்படுத்த வேண்டும். இவ்வாறு தாளத்ரயம் செய்த பிறகு திக்பந்தநத்தில் வைஷ்ணவர்களின் ஸுதர்சநஷடக்ஷரமும், சைவர்களின் பாசுபதஷடக்ஷரமும் விதித்திருப்பதையும் உணர வேண்டும்.

பிறகு சேசாடிகை கொண்டுள்ள அக்நிப்ராகாரகல்பநத்தில், 'பூர்புவ : ஸுவரோம்' என்ற மந்த்ரமாகும்.

"अङ्गन्यासं विना देवि न दास्यन्ति फलान्यपि ॥"

"அங்கந்யாஸம் விநாதேவி த தாஸ்யந்தி பலாந்யபி"

—ஒதேவி! அங்கந்யாஸமில்லாது போனல் அந்த கர்மாவுக்குரிய பயன்களும் கொடுக்கப் பெருதனவாம்" என்பது ப்ரமாணவசனம். பிறகு ஸ்ரீதேவியை பரமாத்மாவாகச் சிந்தனை செய்யவேண்டும். ஸப்த கோடி மஹாமந்தரங்களைக் கொண்டு உபாஸிக்கப் பெற்று வஸ்துவானது பரமாத்மனேயன்றே.

"विना चोपासनां देवि न ददाति फलं नृणाम् ।
ध्यातः स्मृतः पूजितो वा ततो वा नमितोऽपि वा ।
ज्ञानतोऽज्ञानतो वापि पूजकानां विमुक्तिदः ।"

"விநா சோபாஸநாம் தேவி ந ததாதி பலம் ந்ருணும்:
த்யாத: ஸ்ம்ருத: பூஜிதொ வா ததோ வா நமிதோநபி வா.
ஜ்ஞாநதோஜ்ஞாநதோ வாபி பூஜகாநாம் விமுக்தித":.
என்பது ஆகமவசநம். இதன் பொருள் வருமாறு—

—"ஓதேவி! உபாஸனேயில்லாது மனிதர்களுக்குப் பயன் கொடுக்கப் பெறுவதில்லே. தியாகம் செய்தோ, நினேத்தோ, பூஜை செய்தோ, அல்லது நமஸ்காரம் செய்தோ (துதி செய்தோ) தெரிந்தோ, தெரியாமலோ, எவ்வாருயினும் பூஜை செய்கின்ற உபாஸகர்களுக்கு விசேஷமாக விடுதலே யுண்டு" என்பது அந்த வசநங்களுடைய தாத்பர்யம். எனவே பரமாத்மாவைச் சிந்தை செய்யாது பயன் கிடைப்பது அரிது என்று சொல்லியதன்ரே !

ஏனெனில் பரமாத்மன் நிர்குணமாயிருப்பவன். அவனே எவ்வாறு த்யாநம் செய்ய முடியும்? என்ற ஸந்தேஹம் தோன்றுவது இயல்பே யன்ரே! அதற்கு ஸமாதானம் வரு மாறு—பரமாத்மனுக்கு ஸகுணம், நிர்குணம் என்று இரண்டு வடிவம் கல்பனே செய்யப் பெற்றுள்ளது. இதற்குச் சான்று ஸ்ரீராமதாபிங்யுபஷத்தில் பின் வருமாறு கூறப் பெற்றுள்ளது. அது வருமாறு—

"चिन्मयस्याद्वितीयस्य निष्कलस्याशरिणः ।
उपासकानां कार्यार्थं ब्रह्मणो रूपकल्पना ।"

"சிந்மயஸ்யாத்விதீயஸ்ய நிஷ்கலஸ்யாசரீரிண :
உபாஸகாநாம் கார்யார்த்தம் பரஹ்மணே ரூபகல்பதா"

—சிந்மய வடிவாயுள்ளதும், இரண்டற்றதும், நிஷ் கலமாயுள்ள சரீரத்தையுடையதுமான பரப்ரஹ்மத்திற்கு உருவகல்பனேயானது உபாஸகர்களுடைய செயலின் பொருட்டேயாகும் என்பது அச்செய்யுளின் தாத்பர்யம்.

இவ்வாறே ஆக்நேய புராணத்திலும்—

"सकलो निष्कलो ज्ञेयः सर्वज्ञः परमेश्वरः ।
देहस्थः सकलो ज्ञेयो निष्कलो देहवर्जितः ॥"

"ஸகலோ நிஷ்கலோ ஜ்ஞேய: ஸர்வஜ்ஞ: பரமேச்வர :
தேஹஸ்த: ஸகலோ ஜ்ஞேயோ நிஷ்கலோ தேஹவர்ஜித:"

—ஸர்வஜ்ஞஞகிய (எல்லாமுணர்ந்தவன்) பரமேச்வரன் ஸகலன் என்றும், நிஷ்கலன் என்றும் உணர வேண்டும். சரீரத்தோடு கூடியவன் ஸகலன். சரீரமில்லாதது (அருவம்) நிஷ்கலன் என்பது அச்செய்யுளுடைய பொருளாகும்.

அதாவது—சரீரத்தோடு கூடிய ஸகலன் என்னும் பரம சிவன். இவனே கர்மயோகம், ஞானயோகம், பக்தியோகம் என்ற பல பிரிவுகளேக் கொண்ட உபாஸனேக்குரிய செயல் களினுல் ஆராதிக்கத் தக்கவன் என்பது.

லிங்கபுராணத்திலும்—

"सर्वेषामेव मर्त्यानां विभोर्दिव्यं वपुः शुभम् ।
सकलं भावनायोग्यं योगिनामेव निश्चितम् ॥"

"ஸர்வேஷாமேவ மர்த்யாநாம் விபோர் திவ்யம் வபு: சுபம்.
ஸகலம் பாவநரயோக்யம் யோகிநாமேவ நிச்சிதம்"

—எங்கும் பரவியுள்ள ஈச்வரனுடைய திவ்யமானதும், மங்களம் பயப்பதுமான திருமேனியானது ஸகலம் எனப் படும். அது எல்லா மனிதர்களுக்கும், யோகிகளுக்கும்

Scanned by CamScanner

பாவனே செய்வதற்குரியது என உறுதி செய்யப் பெற்றுள்ளது'' என்பது அச்செய்யுளுடைய தாத்பர்யம்.

ஆக்நேயபுராணத்திலும் —

"साधूनामाश्रमस्थानां भक्तानां भक्तवत्सलः ।
उपकर्ता निराकारस्तदाकारेण जायते ।
कार्यार्थं साधकानां च चतुर्वर्गफलप्रदम् ॥"

"ஸாதூநாமாச்ரமஸ்தாநாம் பக்தாநாம் பக்தவத்ஸல:
உபகர்தா நிராகாரஸ்ததாகாரேண ஜாயதே,
கார்யார்த்தம் ஸாதகாநாம் ச சதுர்வர்கபலப்ரதம்."

— "ஆச்ரம வாஸிகளான ஸாதுக்களுக்கும், பக்தர்களுக்கும், பக்தவத்ஸலனை பரமேச்வரன் உபகாரம் செய்பவன் அவன் நிராகாரனுக இருந்தாலும் அந்த ஆகாரத்தொடு தோன்றுகின்றுன். உபாஸகர்களுடைய காரியத்தின் பொருட்டு (உபாஸனே) நால்வகையான புருஷார்த்தங்களுடைய (தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம்) பயனைக் கொடுக்க வல்லதாக அமைந்துள்ளது. அந்த ஆகாரம்—ஸ்கல வடிவம்—என்பது" இவ்வாறு ஆக்நேயபுராணம் சொல்லும்.

எனவே இவ்வாறு பரமாத்மனுடைய சரீரமில்லாது த்யாநம் செய்தால், அந்த த்யாநத்திற்குரிய மனவுறுதி யுண்டாகாது. இதற்குச் சான்று—

"अमूर्तौ चेत् स्थितो न स्यात् ततो मूर्तिं विचिन्तयेत् "

"அமூர்த்தௌ சேத் ஸ்திதோ ந ஸ்யாத்
ததோ மூர்திம் விசிந்தயேத்"

—மூர்த்தியல்லாது இருக்குமே யாகில் சிந்தனையினுல் மனவுறுதியுண்டாகாது. அக்காரணத்தான் மூர்த்தியைச் சிந்தனே செய்ய வேண்டுவது அவசியம்" எனக் கருட புராணம் சொல்லும்;

யாமளத்தில்—

"स्थूलसूक्ष्मविभेदेन ध्यानं तु द्विविधं भवेत् ।
सूक्ष्मं मन्त्रमयं देहं स्थूलं विग्रहचिन्तनम् ॥
करपादोदरस्यापि रूपं यत् स्थूलविग्रहम् ।
सूक्ष्मं च प्रकृतौ रूपं परं ज्ञानमयं स्मृतम् ॥
सूक्ष्मध्यानं महेशानि कदाचिन्न हि जायते ।
स्थूलध्यानं महेशानि कृत्वा मोक्षमवाप्नुयात् ।"

"ஸ்தூலஸூக்ஷ்மவிபேதேந த்யாநம் து த்விவிதம் பவேத்.
ஸூக்ஷ்மம் மந்த்ரமயம் தேஹம் ஸ்தூலம் விக்ரஹசிந்தநம்.
கரபாதோதரஸ்யாபி ரூபம் யத் ஸ்தூலவிக்ரஹம்.
ஸூக்ஷ்மம் ச ப்ரக்ருதௌ ரூபம் பரம் ஜ்ஞாநமயம் ஸ்ம்ருதம்;
ஸூக்ஷ்மத்யாநம் மஹேசாநி கதாசிந் நஹி ஜாயதே.
ஸ்தூலத்யாநம் மஹேசாநி க்ருத்வா மோக்ஷமவாப்நுயாத்"

—த்யாநம் என்பது ஸ்தூலம், ஸூக்ஷ்மம் என இருவகையாகும். ஸூக்ஷ்மத்யாநமென்பது மந்த்ரவடிவாயமைந்த சரீரமாகும். ஸ்தூலமோ வெனில் சிந்தனைக்குரிய விக்ரஹ

வடிவமாகும்; கை, கால், உதரம் என்ற யாதொரு வடிவமுண்டோ அதுவே ஸ்தூலவிக்ரஹமென்பது. ஸூக்ஷ்மமானது ப்ரக்ருதியின் வடிவாயமைந்தது. அது சிறந்த ஞான வடிவமெனச் சொல்லப்பெறும். ஸூக்ஷ்மத்யானமானது ஓ மஹேசாநி! ஒருபொழுதும் தோன்றுது. ஏனெனில் மனதைக் கட்டுப்படுத்தி நிறுத்துவது கடினமென்க. ஸ்தூலத்யானமானது ஓ மஹேசாநி! அதைப் பழக்கினுல் படிப்படியாக மோக்ஷத்தையும் அடையலாம்.

அதாவது ஸூக்ஷ்மத்யானமானது எவருக்கும் எளிதில் ஒருக்காலும் தோன்றுவதில்லை. அக்காரணத்தினுல் கை முதலிய அவயவங்களோடு கூடிய ஸ்தூலவிக்ரஹத்தைச் சிந்தனை செய்யவேண்டியது இன்றியமையாச் சாதனமாகும். இதனுல் நால்வகையான புருஷார்த்தங்களையும் எளிதில் அடையலாம். எனவே அன்னையின், ஸ்தூலவடிவாயமைந்த திவ்யமங்கள விக்ரஹத்தை நியமத்தொடு ஆராதனை செய்து வந்தால் மனவுறுதியும் விரும்பிய பயனும் கிடைக்குமென்பது நமது முன்னோர்களான மஹரிஷிகளுடைய மங்களாசாஸநமாகும்.

"யா தேவீ ஸர்வபூதேஷு புத்திரூபேண ஸம்ஸ்திதா.
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:

—எந்த தேவீ எல்லா ஜீவராசிகளிடத்திலும் புத்தியின் வடிவாக — அந்த : கரணம் — நன்கு நிலைத்து இலங்குகின்றனளோ, அந்த மஹாமயையாம் அன்னைக்கு நமஸ்காரம்.

சிவார்ப்பணம்.

இவ்வாறு ந்யாஸங்களுடைய விளக்கம்

இவண் முற்றும்

श्रीलघुसप्तदशीस्तवराजः

49644

THE KUPPUSWAMI SASTRI
RESEARCH INSTITUTE
MYLAPORE, CHENNAI-4.

शिवाय गुरवे नमः

नमश्चण्डिकायै

महामाहेश्वराचार्यश्रीपृथ्वीधरभट्टारकविरचितः

श्रीलघुसप्तदशीस्तवराजः

(श्रीचण्डीचरितसंग्रहस्तवः)

ओं नमः चण्डिकायै - ओं - மங்களம், चण्डिकायै - சண்டிகா தேவியின் பொருட்டு, नमः — நமஸ்காரம்.

यत् कर्म धर्मनिलयं प्रवदन्ति[1] धीराः
यज्ञादिकं तदखिलं सकलं त्वयैव ।
त्वं चेतना यत इति प्रविचार्य चित्ते[2]
नित्ये त्वदीयचरणौ शरणं प्रपद्ये ॥ १ ॥

हे नित्ये - (எக்காலத்திலும்) நிலைத்துள்ள ஓ அன்னாய்! अखिलम् - முழுவதுமாயுள்ள, यत् - யாதொரு, कर्म - செயலுண்டோ. धर्मनिलयम् — (அது) தர்மத்திற்கு இருப்பிடமாயுள்ளது என, धीराः - அறிஞர்கள், प्रवदन्ति-சொல்லுகின்றனர். यज्ञ-आदिकम् – வேள்வி முதலான, अखिलम् — அந்த தர்மத்தின் வடிவாயுள்ள யாவும், त्वया-एव — உன்னாலேயே, सकलम् — முழுமை பெற்று விளங்குகின்றது. यतः - எக்காரணத்தால், त्वम् - நீ, चेतना — சேதனை, इति — என்று சொல்லப் பெறுகின்றனையோ, (அக்காரணத்தால்) चित्ते — மனத்தில், प्रविचार्य — நன்கு பரிசீலநம் செய்து, त्वदीय-चरणौ - உன்னுடைய சரணங்கள் இரண்டையும், शरणम् — சரணமாக, प्रपद्ये — (நான்) நன்கு பற்றிக் கொள்ளுகிறேன்.

---

[1] वलयन्ति क. [2] चित्तं क.

சண்டிகாயை நம:

சிவாய குரவே நம:

மஹாமாஹேச்வராசார்ய ஸ்ரீப்ருத்வீதர-

பட்டாரகவிரசித:

ஸ்ரீலகுஸப்ததசீஸ்தவராஜ:

(ஸ்ரீ சண்டீசரிதஸம்க்ரஹஸ்தவ:)

ஓம் நம: சண்டிகாயை — ஓம் சண்டிகாதேவியின் பொருட்டு நமஸ்காரம்.

யத் கர்ம தர்மநிலயம் ப்ராவதந்தி தீரா:
யஜ்ஞாதிகம் ததகிலம் ஸகலம் த்வயைவ.
த்வம் சேதநா யத இதி ப்ரவிசார்ய சித்தே
நித்யே த்வதீயசரணௌ சரணம் ப்ரபத்யே (க)

ஓ அன்னாய் ! அழிவற்றவளே ! யாதொரு செயலானது தர்மத்தின் நிலைந்த இருப்பிடமென்று கற்றறிந்த வித்தகர்கள் கருதுகின்றனரோ, அந்த வேள்வி முதலியன யாவும் உன்னோடு இணைந்தே காணப் பெறுவனவுமன்றோ ! அதாவது உன்னைத் தவிர வேறு ஒரு வஸ்துவும் இவ்வுலகில் கிடையாது என்பது தாத்பர்யம்.

ஓம்—என்ற சொல் மங்களத்தைக் குறிப்பது. 'சண்டிகா' என்ற சொல்லின் விளக்கத்தை எமது தேவிமாஹாத்ம்யத்தினுடைய உரையிலுள்ள 'தோற்றுவாய்' என்ற தலைப்பில் விஸ்தாரமாக விளக்கப்பெற்றுள்ளதைக் காணலாம்.

எனவே, செயல்களின் வடிவாகவும், அச்செயல்களிலிருந்து தோன்றுகின்ற பயன்களுடைய நிறைவின் வடிவாகவும் அன்னை ஒருவளே இருப்பவள் என்பது ஸாரம்.

மற்றும் ஓ அன்னாய் ! நீ எக்காரணத்தால் இவ்வாறு அமைந்துள்ளனையோ, அக்காரணத்தால் நான் உன்னை 'சேதநா' என்று எனது மனத்திலே நன்கு பரிசீலநம் செய்து உன்னுடைய இரண்டு சேவடிகளையும் தஞ்சம் புகுந்து, அவைகளைப் பற்றியவனாகவே நான் சரணமடைகிறேன் என்பது.

இச்செய்யுளில் விசேஷமாகக் காணப் பெறுகின்ற சொற்களின் விளக்கம் வருமாறு—

यत्-कर्म – யத்-கர்ம-யாதொன்று செயல் வடிவாயுள்ளதோ, அது கர்மா எனச் சொல்லப் பெறும். அது பல வகையாக விரிவடைவது என ஒவ்வொரு மதத்தினரும் சொல்லுவர். இதைக் குறித்து ஸ்ரீபர்த்ருஹரி பின்வருமாறு விளக்கம் கொடுப்பர்—

"यदसज्जायते पूर्वं जन्मना यत् प्रकाशते ।
तन्निवर्त्यं विकार्यं च कर्म द्वेधा व्यवस्थित् ।।
प्रकृत्युच्छेदसंभूतं विकार्यं काष्ठभस्मवत् ।
अन्यद् गुणान्तरोत्पत्त्या सुवर्णादिविकारवत् ।।"

"யதஸஜ்ஜாயதே பூர்வம் ஜந்மநா யத் ப்ரகாசதே.
தந்நிவர்த்யம் விகார்யம் ச கர்ம த்வேதா வ்யவஸ்திதம்
ப்ரக்ருத்யுச்சேதஸம்பூதம் விகார்யம் காஷ்டபஸ்மவத்
அந்யத் குணாந்தரோத்பத்யா ஸுவர்ணாதிவிகாரவத்".

—யாதொரு அஸத்—முதலில் தோன்றியதோ, யாதொன்று தோற்றத்தோடு ப்ரகாசிக்கின்றதோ, "असद्वा इदमग्र आसीत् - அஸத்வா இதமக்ர ஆஸீத் - தோற்றத்திற்கு முன்பே அஸத்தே. முதலில் இருந்தது" என்பது ச்ருதியாகும். அது 'நிவர்த்யம்', என்றும் 'விகார்யம்' என்றும் முறையே இருவகையாயுள்ள கர்மா என சொல்லப் பெற்றுள்ளது.

ப்ரக்ருதியினுடைய பரவுதலின் காரணமாகத் தோன்றுவது 'விகார்யம்' அது கட்டையினுள்ளே இலங்கும் பஸ்மம் போன்றது. மற்றது குணாந்தரத்தினுடைய 'தோற்றத்தினுல் ஸுவர்ணம் முதலிய மாறுதல் போன்றது" என்பது அச் செய்யுட்களின் தாத்பர்யம்.

இவ்விடத்தில் கர்மா என்ற சொல்லானது பல பொருள் விளக்கங்களைத் தன்னுள்ளே கொண்டு விளங்குவது. பகவத்கீதை, தர்சநங்கள், கோசங்கள் முதலியவைகளில் இச் சொல்லின் விரிவான விளக்கங்களைக் காணலாம்.

धर्म: - தர்ம: — தரதி லோகாந் புண்யாத்மபி :- புண்ய சீலர்களால் இவ்வுலகம் தாங்கப் பெறுகின்றது என்பது அச் சொல்லின் விளக்கமாகும். "இந்த தர்மம் ஸ்த்யத்திலிருந்து தோன்றுவது. தயை, தாநம் இவ்விரண்டிலும் வளர்ச்சி

—குணாந்தரம்—குணத்தின் மாறுபாடு.

யடைவது, பொறைமயில் நிலைத்து நிற்பது, சினத்தால் சிறுமை பெற்று அழிவது" என்பன போன்ற பல இலக்கணங்களை மஹாபாரதம், ஸ்ம்ருதிகள், தர்சநங்கள், புராணங்கள், இதிஹாஸங்கள் போன்றவைகளில் பரக்கக் காணலாம்.

निलयम् — நிலயம் நிலைத்த இருப்பிடம், धीरा: — தீரா: கவிகள், பண்டிதர்கள், உபாஸகர்கள் என்பன போன்ற பொருள் விளக்கங்களை இச்சொல் சுட்டி நிற்பதாகும். धियं-राति-इति - தியம் — புத்தியை ராதி பிரேரணை செய்வது என்பது அச்சொல்லின் விளக்கம்.

चेतना - சேதநா — 'सर्वभूतेषु चेतना' — ஸர்வ பூதேஷு சேதநா, —எல்லா ஜீவராசிகளிடத்திலும் நீ சைதந்ய வடிவாயுள்ளவள்" என்று ஸப்தசதியில் சொல்லியுள்ளதை இங்கு கருத்தில் கொள்ளற்பாலது. 'சேதநா, சித்தம் என்ற இரண்டு சொற்கள் இச்செய்யுளில் காண்கின்றன. அவைகளுடைய விளக்கம் வருமாறு चेतना-चेतयते-अनया इति :- சேதநா, சேதயதே, அநயா இதி "चिती संज्ञाने — சிதீ ஸம்ஜ்ஞாநே" என்பது தாது. இச் சொல் புத்தியைக் குறிப்பது என பாகவதம் சொல்லும். அவ்விடத்தில்—

"प्रधानकालाशयधर्मसंग्रहे
शरीर एष प्रतिपद्य चेतनाम् "

"—एष विभुः परमानन्दोऽपि शरीरे विषयाकारां बुद्धिं प्राप्य क्रियाफलत्वेन प्रतीयते " – इति;

Scanned by CamScanner

"ப்ரதாநகாலாசயதர்மஸம்க்ரஹே
சரீர ஏஷ ப்ரதிபத்ய சேதநாம்"

"ஏஷ விபு: பரமாநந்தோऽபி சரீரே விஷயாகாரம் புத்திம் ப்ராப்ய க்ரியாபலத்வேந ப்ரதீயதே" — இதி;-

—இந்த பரமாத்மா பரமாநந்த நிலையையெய்திடினும் சரீரத்தில் விஷயங்களின் வடிவாயமைந்துள்ள புத்தியைப் பெற்று, செயல், அச்செயலின் பயன் இவைகளின் வடிவாகக் காணப் பெறுகின்றான்" என ஓர் உரையாசிரியர் சொல்லுவர். "சித்தின்வடிவாயமைந்த மனத்தின் செயல்" என ஸ்ரீதரஸ்வாமி சொல்லுவர்.

பகவத்கீதையிலும் —

"इच्छा द्वेषः सुखं दुःखं संधातश्चेतना धृतिः"

"இச்சா த்வேஷ: ஸுகம் துக்கம் ஸம்காத: சேதநா த்ருதி:"

—இச்சை, வெறுப்பு, ஸுகம், துக்கம், சரீரம்—அல்லது சரீரத் தொகுதி, என்ற இவைகள் ஞாநவடிவாயமைந்த மனத்தின் செயல், த்ருதி எனச் சொல்லப்பெற்றது, செய்யுளில், 'சேதநா' என்ற சொல்லுக்குப் புத்தியினிடமிருந்து வெளிப்படுகின்ற பொறிகளுடைய செயல் எனச் சொல்லப் பெற்றுள்ளது.

அச் செயலும், கொதிக்கின்ற உலைக்களத்திலுள்ள தீப்பிழம்பில் தோன்றும் பொறிகள் போல, ஆத்மசைதந்யத்தின் ஆபாஸத்தினுடைய (மாறுபாடு) ஒளியினால் உந்தப் பெறுவதே சேதநா எனச் சொல்லப்பெறும். மற்ற விசேஷமாயுள்ள விளக்கங்களை உரையாசிரியர்களாகிய ஸ்ரீசம்கரா-நந்தர், ஸ்ரீவேங்கடநாதர் முதலியவர்களுடைய உரையில் காணலாம்.

चित्ते — சித்தே — (சித்தம்)— चेतति-अनेन-इति — சேததி; அநேக இதி சித்தம் अनुसन्धानात्मिकान्तःकरणवृत्तिः - அநுஸந்தாநாத்மிகாந்த:கரணவ்ருத்தி :— அநுஸந்தாநவடிவாயுள்ள அந்த:கரணத்தினுடைய செயல்" என்பது அச்சொல்லின் பொருள் என வேதாந்திகள் சொல்லுவர்.

பாகவதத்தில்—

"यत् तत् सत्त्वगुणं स्वच्छं स्वान्तं भगवतः पदम् ।
यदाहुर्वासुदेवाख्यं चित्तं तन्महदात्मकम् ॥
स्वच्छत्वमविकारित्वं शान्तत्वमिति चेतसः ।
प्रवृत्तिलक्षणं प्रोक्तं ... ।" इति;

" — अधिभूतस्वरूपेण तस्यैव महानिति संज्ञा; अध्यात्मरूपेण चित्तम्; उपास्यरूपेण वासुदेवः; अधिष्ठातुः अस्य क्षेत्रज्ञः" इति ।

"யத் தத் ஸத்வகுணம் ஸ்வச்சம் ஸ்வாந்தம் பகவத: பதம்.
யதாஹுர் வாஸுதேவாக்யம் சித்தம் தந்மஹதாத்மகம்.
ஸ்வச்சத்வமவிகாரித்வம் சாந்தத்வமிதி சேதஸ:
ப்ரவ்ருத்திலக்ஷணம் ப்ரோக்தம் ... " இதி;

அநுஸம்தாநம்-பின் பற்றுவது, தொடருவது.

—"அதிபூதஸ்வரூபேண தஸ்யைவ மஹாநிதி ஸம்ஜ்ஞா;
அத்யாத்மரூபேண சித்தம்; உபாஸ்யரூபேண வாஸு-
தேவ:; அதிஷ்டாது: அஸ்ய க்ஷேத்ரஜ்ஞ: " இதி

என்பது அச்செய்யுட்களுடைய உரையாகும். இவ்வுரையின் பொருள் விளக்கம் வருமாறு—

"யாதொன்று தெளிவாகவும் ஸத்வகுணத்தைத் தழுவியுள்ளதாயும் இருக்கின்றதோ, அது ஹ்ருதயவடிவாயமைந்த பகவானுடைய இருப்பிடமாகும். அந்த இடம் வாஸுதேவனுடையது. அதை மஹத் என்ற வடிவாயமைந்த சித்தமெனவும் அழைப்பர். அதனுடைய இயல்போ தெளிந்த தன்மை, மாறுதல் இல்லாத நிலை, சாந்தமாயுள்ள தன்மை என்ற இவைகளாகும். இதுவே அந்த சேதஸின் நிலை. இது ப்ரவ்ருத்தியை இலக்கணமாகக் கொண்டது" என்பதுமாகும். ஸ்ரீதரஸ்வாமி தமது உரையில்; अनेनैव चित्तशक्ते: सम्बन्ध: - அநேநைவ சித்சக்தே: ஸம்பந்த:—இதோடு கூடவே சித்தாகிய சக்திக்கும் தொடர்பு உள்ளது" எனச் சொல்லுவர்.

அதிபூதம் என்ற வடிவத்தோடு அதற்கே மஹாந் என்ற பெயர். அத்யாத்மம் என்ற வடிவத்தோடு சித்தம் எனப் பெயர். உபாஸிக்கத்தக்க வடிவத்தோடு வாஸுதேவன் என்ற பெயர். இவனுக்கு அதிஷ்டாதாவாக—தலைவனாக—இருப்பவன் க்ஷேத்ரஜ்ஞன் என்பது என்றவாறு.

இக் கருத்தை, பதஞ்ஜலிமஹர்ஷியும் "योगश्चित्तवृत्ति-निरोध: — யோக: சித்தவ்ருத்திநிரோத: — யோகமென்பது (சேர்க்கை) சித்தத்தினுடைய செயல்களைத் தடுத்து ஒருங்கிணைப்பது எனச் சொல்லுவர்.

மற்றும்; முண்டகோபநிஷத்திலுள்ள மந்த்ரம் வருமாறு:—

"एषऽणुरात्मा चेतसा वेदितव्यो
यस्मिन् प्राणः पञ्चधा संविवेश ।
प्राणैश्चित्तं सर्वमोतं प्रजानां
यस्मिन् विशुद्धे विभवत्येष आत्मा ॥" इति ;

एष: - இந்த अणु: நுண்ணியதாயுள்ள आत्मा — ஆத்மாவானது, चेतसा — மிகவும் தூய்மை பெற்ற மனத்தால், वेदितव्य — அறியத் தக்கது. यस्मिन् — எந்த மனத்தினிடம், प्राण: — ப்ராணன், पञ्चधा — ஐவகையாக, संविवेश — நன்கு பிரவேசித்துள்ளதோ, प्रजानाम् — பிராணிவர்க்கங்களுடைய, चित्तम् — சித்தம், सर्वम् — யாவும், ओतम् — பரவியுள்ளதோ, विशुध्दे — மிகவும் தூய்மை வாய்ந்த, यस्मिन् — எந்த மனத்தினிடம், एष: — இந்த, आत्मा — ஆத்மாவானது, विभवति — விசேஷமாக நிலைத்துள்ளதோ;

"ஏஷோऽணுராத்மா சேதஸா[1] வேதிதவ்ய:
யஸ்மிந் ப்ராண: பஞ்சதா ஸம்விவேச.
ப்ராணை: சித்தம் ஸர்வமோதம் ப்ரஜாநாம்
யஸ்மிந் விசுத்தே விபவத்யேஷ ஆத்மா" இதி:

—மிகவும் நுண்ணியதாயுள்ள இந்த ஆத்மா மனத்தால் உணரத்தக்கது. எந்த மனத்தினிடம் ப்ராணன் முதலிய

---

[1] சேதஸ் — என்ற சொல் ஹ்ருதயம், சித்தம், ஸ்வாந்தம், அந்த:கரணம் என்ற பல பொருட்களைச் சுட்டி நிற்பது.

Scanned by CamScanner

ஐவகையாயுள்ள வாயுக்கள் நன்கு நிலைத்துள்ளனவோ; இத்தகைய ப்ராணன்களால் ப்ராணிவர்களுடைய அந்த:கரணம் யாவும், (சித்தம்) ஒருங்கிணைந்து பரவியுள்ளனவோ, மிகவும் தூய்மை பெற்றுள்ள அத்தகைய சித்தத்தினிடத்தில் இந்த ஆத்மாவும் விசேஷமாக நிலைத்திருப்பது'' என்பது அந்த மந்த்ரத்தின் தாத்பர்யமாகும்.

पाथोधिनाथतनयापतिरेष शेष-
पर्यङ्कलालितवपुः पुरुषः पुराणः ।
त्वन्मोहपाशविवशो जगदम्ब सोऽपि
व्याघूर्णमाननयनः शयनं चकार ॥ २ ॥

हे जगदम्ब — உலகங்களுக் கெல்லாம் அன்னையாய் விளங்கும் ஓ சண்டிகாதேவி! पाथोधि-नाथ-तनया-पतिः-கடலரசன் மகளாம் திருமகளுடைய நாயகனும், शेषपर्यङ्क-लालित-वपुः- அரவணையில் தாலாட்டப்பெற்ற திருமேனியையுடையவனும், पुराणः— பழைமை வாய்ந்தவனுமாகிய एष — இந்த पुरुषः — புருஷன், त्वन्मोह-पाशविवशः — உன்னுடைய மோஹமெனும் கயிற்றினால் கட்டுண்டு தனது நிலையையிழந்தவனாகவும், व्या-घूर्णमान-नयनः - மயக்கத்தால் செருகிய கண்களையுடையவனாகவும், सः अपि — அவனும், शयनम् — துயிலை, चकार — செய்தான் அன்றோ !

இச்செய்யுளில் ஸ்ரீமந்நாராயணனும், அன்னையாம் மஹாமாயையின் மோஹத்தால் மயக்கமடைந்து அரவணையில் ஆழ்ந்த துயிலையும் மேற்கொண்டான் என்ற வரலாறு சொல்லப் பெறுகின்றது—

பாதோதிநாததநயாபதிரேஷ சேஷ-
பர்யங்கலாலிதவபு : புருஷ: புராண:.
த்வந்மோஹபாசவிவசோ ஜகதம்ப ஸோऽபி
வ்யாகூர்ணமாநநயந: சயநம் சகார. (2)

இவ்வுலகுக்கு அன்னையாய் விளங்குகின்ற ஓ தேவி! அரவணையிலே தாலாட்டப்பெற்ற திருமேனியையுடையவனும், கடலரசன் மகளாம் திருமகளின் நாயகனும், பழைமை வாய்ந்தவனுமாகிய ஸ்ரீபுருஷோத்தமனும், உன்னிடத்தில் மயக்கம் கொண்டுள்ள காரணத்தால் சுற்றிலும் செருகிய கண்களையுடையவனாக அவன் அன்று உறக்கத்தில் ஆழ்ந்தான் அன்றோ !

प्रायो-धि-माथ-तनया-पतिः — பாதோதி—நாத—தநயா—பதி:- பாதோதி கடல், पायांसि धीयन्ते अत्र — பாதாம்ஸி—தீயந்தே: அத்ர அவ்விடத்தில் ஜலங்கள் ஒருங்கிணைவதால் பாதோதி எனச் சொல்லப் பெற்றது. நாத:—தலைவன், தநயா—மகள், பதி:—நாயகன், புருஷன், கடலரசன் மகளாம் லக்ஷ்மியினுடைய நாயகன் என்பது.

शेष-पर्यङ्क-लालित-वपुः - சேஷ—பர்யங்க - லாலிதவபு: - சேஷன், ஆதிசேஷன், பர்யங்கம், படுக்கை, லாலித— தாலாட்டுவது, வபு:, சரீரம். ஆதிசேஷன் என்ற படுக்கையில் தாலாட்டப்பெற்ற திருமேனியை யுடையவன் ஸ்ரீமந்நாராயணன் என்பது.

पुरुषः + पुराणः (पुराणपुरुषः) புருஷ: - புராண: (புராண புருஷ:) —புருஷ: புருஷன், புராண பழைமை. இச் சொல்லின் விளக்கம் வருமாறு - பூர்வஸ்மிந், காலே, பவ: - முந்தியதான

தோன்றினர். பிறகு உன்னுடைய விருப்பத்திற்கிணங்க அவர்களை ஸ்ரீமந்நாராயணனால் அழிக்க முடியாத நிலையிலிருக்கும் பொழுது, உனது மாயையினால் அவ்விருவரும் பிரிக்கப் பெற்று முடிவில் அழிவையும் அடைந்தனர் அன்றோ !

कौतुकम् — கௌதுகம் - कुतुकस्य भाव: कौतुकम्— குதுகஸ்ய பாவ: கௌதுகம்-மட்டற்ற மகிழ்ச்சி. இவ்விடத்தில் அன்னை விரும்பியவாறு மதுகைடபர்களைத் தனது செவிகளின் அழுக்கிலிருந்து தோற்றுவித்தாள் என்பது புராணவரலாறு.

जनार्दन: — ஜனார்தந: ஜந-அர்தந:- ஸமுத்திரத்தின் உள்ளே வஸித்த ஜநன் என்ற அஸுரனை அழித்தவன், ஜநார்தநன். அல்லது ஜநங்களால் யாசிக்கப் பெறுவதால் (வேண்டுவது) ஜநார்தநன். அல்லது ஜநாந்-லோகாந் ஹரவடிவமெடுத்து (சிவன்) அழிப்பதால் ஜநார்தநன். அல்லது ஜநயதி உலகங்களை நான்முகன் வடிவாயிருந்து கொண்டு தோற்றுவிப்பவன். அல்லது உலகங்களைப் படைத்து,அவ்வுலகங்களைக் காப்பாற்றுகின்றவன் என்பன போன்ற பல பொருள் விளக்கங்களைப் புராணங்களில் காணலாம்.

மது-கைடபர் என்ற இவர்களுடைய வரலாறுகளைப் புராணங்களில் விஸ்தாரமாகக் காணலாம்.

त्वन्मायया — த்வந்மாயயா —: த்வத் - உன்னுடைய மாயயா-மாயையினால் என்றது—

மாயைக்குத் தனியாக ஓர் இருப்பிடமும் கிடையாது. அது ஈச்வரனிடத்தில் அருவமாய் மறைந்திருப்பது. ஈசனது

இச்சையின் அளவிலே அது வெளியே தோன்றுவது. அப்பொழுது ஈசனுடைய படைப்புத் தொழிலுக்குத் துணையாயிருப்பது என்பது ஸாரம்.

மாயா என்ற சொல்லின் விளக்கம் வருமாறு—'யா மா ஸா மாயா' மூன்று காலங்களிலும் எது இல்லாது போகுமோ அதுவே மாயை யென்பது. இந்த மாயையினுடைய இயல்பு ஆத்மா அல்லாத சரீரம் முதலியவற்றில் ஆத்மா என்னும் புத்தியைத் தோற்றுவிப்பது எதுவோ அதுவே மாயை எனச் சொல்லப் பெறும். பிறப்புக்கும் இம்மாயையே காரணம்.

இந்த மாயைக்கு விக்ஷேபம் (பரவுதல்) ஆவரணம் (மறைத்தல்) என்ற இரண்டு சக்திகளுண்டு. விக்ஷேப சக்தியானது லிங்கசரீரம் முதல் ப்ரஹ்மன் வரையிலுள்ள உலகை, ஸ்தூலம், ஸூக்ஷமம், காரணம் முதலியவைகளினால் தோற்றுவிப்பதாகும். ஆவரண சக்தியானது ஈச்வரனையும், ஞாநிகளையும் தவிர, ஏனைய ஜீவராசிகள் அனைத்தையும் த்ரிபதார்த்த உறுதியிலே தெரியவொட்டாது நாஸ்தி, (இல்லை) ந பாதி (ஒளிர்வதில்லை) என்ற இரு வகையில் மாரிக்காலத்தின் அமாவாஸையின் நிசியிலே தோன்றும் இருளைப் போல மறைத்து நிற்பதுமாகும்.

இது அவித்யை, வித்யை என இருவகையாகும். பிரவிருத்திவழியிலே இருப்பவர்கள் அவித்யையை தொடர்ந்து நிற்பவர்கள், நிவிருத்திவழியிலே நிறப்பவர்களும், வேதாந்தவிசாரம் செய்பவர்களும். ஈசனிடம் பக்தியைச் செய்ய விழைகின்றவர்களும் வித்யையின் வழியிலே நிற்பவர்கள்.

Scanned by CamScanner

அவித்யையின் வழியிலே நிற்பவர்கள் ஸம்ஸார பந்தமுடையவர்கள். வித்யையின்வழியிலே நிற்பவர்கள் நித்ய முக்தர்கள். உலகத்தில் எவர் ஈசனிடத்தில் பக்தி செலுத்துகின்றனரோ அவர்களுக்கு வித்யையானது ஒளிர் விட்டுத் திகழும். மற்றவர்களுக்கோ வித்யையின் ஒளி யுண்டாவதில்லை.

வித்யையுண்டாயின் ஞாநம் பிறக்கும். ஞாநம் பிறந்தால் முக்தர்களாகலாம். ஈசனிடத்தில் ஞாநம் தோன்றுதவர்களுக்கு மோக்ஷமென்பது உண்டாகாது. மாயையைப் பற்றிய இன்னோன்ன பல பொருள் விளக்கங்களை, மஹாபாரதம், பாகவதம், அத்யாத்மராமாயணம், உபநிஷதங்கள், பகவத்கீதை போன்றவைகளில் பரக்கக் காணலாம். (4)

यन्माहिषं वपुरपूर्वबलोपपन्नं

यन्नाकनायकपराक्रमजित्वरं च ।

यल्लोकशोकजननव्रतबद्धहार्दं

तल्लीलयैव दलितं गिरिजे भवत्या ॥ ४ ॥

अपूर्व-बलउपपन्नम् — வியக்கத்தக்க வலிமையோடு கூடிய, यत् — யாதொரு, माहिषम् — எருமைத் தோடர்ந்துள்ள वपुः — சரீரமுண்டோ, नाक-नायक-पराक्रम-जित्वरं-च — தேவேந்த்ரனுடைய தோள் வலிமையை வெற்றி கொண்டதாக, यत्–யாதொரு சரீரமுண்டோ; लोक-शोक-जनन-व्रत-बद्धहार्दं यात्— உலகத்திற்கு துயரத்தை யுண்டு பண்ணுவதையே தனது விரதமாகக்கொண்ட மனப்பான்மையையுடைய

यत् — யாதொரு சரீரமுண்டோ, तत् அப்பெருமை வாய்ந்த சரீரத்தை, हे गिरिजे ! மலையரசன் மகளாம் ஓ அன்னாய்! भवत्या—உன்னால், लीलया एव — விளையாட்டாகவே, दलितम्— அழிக்கப் பெற்றது.

இச் செய்யுளின் மஹிஷாஸுரனுடைய தோள் வலிமையின் பெருமையும், அவ்வலிமையின் அழிவும், சொல்லப் பெறுகின்றது—

யந்மாஹிஷம் வபுரபூர்வபலோபபந்நம்

யந்நாகநாயகபராக்ரமஜித்வரம் ச.

யல்லோகசோகஜநநவ்ரதபத்தஹார்தம்

தல்லீலயைவ தலிதம் கிரிஜே பவத்யா. (4)

மலையரசன் மகளாம் ஓ அன்னாய்! மஹிஷவடிவமெடுத்துள்ள யாதொரு சரீரமுண்டோ, தேவர்களுக்குத் தலைவனும் தேவேந்தரனுடைய வலிமையை வெற்றி கொண்டதாக யாதொரு சரீரம் இருக்கின்றதோ, உலகத்திற்குத் துயரை யுண்டுபண்ணுவதையே இயல்பாகக் கொண்ட மனப்பான்மை பெற்ற யாதொரு சரீரம் உள்ளதோ, அத்தகைய சரீரமானது உன்னால் கணப்பொழுதிலே விளையாட்டாகவே அழிக்கப் பெற்றதன்றோ!

नाक-नायक-पराक्रम-जित्वरम्— நாக - நாயக - பராக்ரம-ஜித்வரம்— நாக-ஸ்வர்கம், நாயக-தலைவன், பராக்ரமம்-தோள்வலிமை, ஜித்வரம் - வெற்றி, தேவலோகத்திற்கு நாயகனும் தேவேந்த்ரனுடைய தோள்வலிமையையும் வென்றி கொண்டவன் என்பது.

लोक-शोक-जनन-व्रत-बद्ध-हार्द्त्—லோக—சோக—ஜநந-வ்ரத—பத்த—ஹார்தம்—லோக—உலகம், சோகம்-துயரம், ஜநநம்-தோற்றம், வ்ரதம் - ஸம்கல்பம், பத்த - உறுதி. ஹார்தம் - மனப்பான்மை. உலகங்களுக்குத் துயரத்தைத் தோற்றுவிப்பதே தனது பிறவிப் பயன் என்ற மனப்பான்மை கொண்டவன் என்பது ஸாரம். (4)

यो धूम्रलोचन इति प्रथितः[1] पृथिव्यां

भस्मी बभूव चरणे[2] तव हुंकृतेन ।

सर्वासुरक्षयकृते गिरिराजकन्ये

मन्ये स्वमन्युदहने कृत एष होमः ॥ ५ ॥

पृथिव्याम्—அவநியில், यः — எவன், धूम्र-लोचनः—தூம்ரலோசநன், इति—என்று, प्रथितः—பிரஸித்தனுக (புகழ் வாய்ந்தவனுக) இருந்தானே, (அவன்) तव—உன்னுடைய हुंकृतेन—ஹூங்காரத்தினுல், चरणे—(உனது) இரண்டு சரணங்களிலும், भस्मी—சாம்பராக, बभूव— ஆனுன் அன்ருே! हे गिरिराजकन्ये—மலையரசன் மகளாம் ஓ அன்னுய்! सर्व-असुर-क्षय-कृते—எல்லா அஸுரர்களுடைய அழிவைச் செய்யும்பொழுது, स्व-मन्यु-दहने-தனது சினமென்னும் தீயில் செய்வதில், एषः — இந்த, होमः—ஹோமமானது, कृतः — செய்யப் பெற்றது (என்று) मन्ये—(நான்) நினைக்கிறேன்.

---

[1] प्रभव [2] समरे

இச்செய்யுளில், அன்னை, அவநியில் புகழ் வாய்ந்த தூம்ரலோசநன் என்ற அஸுரனைத் தனது ஹூம்காரத்தினுல் சாம்பராகச் செய்த வரலாறு சொல்லப் பெறுகின்றது—

யோ தூம்ரலோசந இதி ப்ரதித: ப்ருதிவ்யாம்

பஸ்மீ பபூவ சரணே தவ ஹூம்க்ருதேந.

ஸர்வாஸுரக்ஷயக்ருதே கிரிராஜகந்யே

மந்யே ஸ்வமந்யுதஹநே க்ருத ஏஷ ஹோம: (5)

ஓ அன்னுய்! அவனியில் தூம்ரலோசநன் என்ற பெயரோடு எவன் புகழ் வாய்ந்தவனுக இருந்தானே, அவனை உன்னுடைய ஹூம்காரத்தினுல், உனது திருவடியின் கீழ் சாம்பராகச் செய்தாய் அன்ருே! அச்செய்கையும் அஸுரர்கள் அனைவரையும் அழியச் செய்த உனது கோபத்தினுடைய சமநத்தின் பொருட்டுச் செய்யப் பெற்ற புநிதமான ஹோமம் எனவும் நான் நினைக்கிறேன்.

धूम्र-लोचनः—தூம்ரலோசநன் — தூம்ர — தூம்ரவர்ணம், லோசநம்-கண்-புகையால் சூழப்பெற்ற கண்களையுடையவன், இச்சொல்லின் விளக்கம் வருமாறு — धूम-धूमवर्णम्-राति-इति தூமம்-தூமவர்ணம்-ராதி கொடுப்பது-தூம- (புகை) வர்ணத்தைக் கொடுப்பது. அதாவது கருப்பு, சிவப்பு இவையிரண்டும் கலந்த நிறம்; இத்தகைய கண்களைக் கொண்டவன். இவன் ஸும்பாஸுரனுடைய ஸேனைத் தலைவன். स्व-मन्यु-दहने-ஸ்வ—மந்யு—தஹநே - ஸ்வ- தன்னுடைய. மந்யு-கோபம்-சினம். தஹந- எரிப்பது, அதாவது தனது சினத்தை அழிப்பது என்பது கருத்து.[5]

Scanned by CamScanner

केषामपि त्रिदशनायकपूर्वकाणां
जेतुं न जातु सुलभावपि चण्डमुण्डौ ।
तौ दुर्मदौ सपदि शम्बरतुल्यमूर्ती[1]
मातस्त्वमेव कुलिशात् पतितौ विशीर्षौ ॥ ६ ॥

केषाम्—எந்த, त्रिदश-नायक-पूर्वकाणाम्—अपि—தேவேந்தரனை முன்னிட்டுள்ள தேவர்களுக்கும்; चण्ड-मुण्डौ-अपि— சண்டன் முண்டன் என்ற இருவரும், जातु - ஒருபொழுதும், जेतुम्- வெல்லுவதற்கு, सुलभौ - ஸுலபர்களாக. न - இருக்க வில்லையோ, शम्बर-तुल्य-मूर्ती - சம்பரன் என்ற அஸுரனுக்கு நிகரான சரீரத்தை யுடையவர்களும், दुर्मदौ - கொடிய கொழுப்பை யுடையவர்களுமான, तौ - அவ்விருவரையும்; हे मातः - ஒ அன்னாய் ! सपदि - அப்பொழுதே, त्वम्-एव-நீயே, कुलिशात् - வஜ்ராயுதத்தினால், विशीर्षौ - விலகிய சென்னியை யுடையவர்களாக, पतितौ - விழச் செய்தாய் அன்ரோ !

இச் செய்யுளில் சண்டன், முண்டன் என்ற இருவரு டைய அழிவும் சொல்லப் பெறுகின்றது—

கேஷாமபி த்ரிதசநாயகபூர்வகாணும்
ஜேதும் ந ஜாது ஸுலபாவபி சண்டமுண்டௌ.
தௌ துர்மதௌ ஸபதி சம்பரதுல்யமூர்த்தீ
மாதஸ்த்வமேவ குலிசாத் பதிதௌ விசீர்ஷௌ (6)

[1]मूर्ते

ஓ அன்னாய்! தேவேந்த்ரனை முன்னிட்டுச் சென்ற தேவர்களுக்கும், சண்டன் முண்டன் என்ற இருவர்களும் வென்றி கொள்ள முடியாதவர்களாக இருந்தனர். அக்கொழுப்பு வாய்ந்த அவ்விருவரும் சம்பரன் என்ற அஸுரனுக்கு நிகரான சரீரத்தைப் பெற்று விளங்கிய பொழுதிலும், அவ்விருவருடைய சென்னிகளையும், நீ ஒருவனே தனித்திருந்து உன்னுடைய வஜ்ராயுதத்தினால் கொய்து விழச் செய்தாயன்ரோ !

त्रि दश-नायक-पूर्वकाणाम् — த்ரி - தச - நாயக - பூர்வ காணும் - த்ரி - தசா :— தேவர்கள் - நாயகன் - தலைவன் - தேவர்களுக்குத் தலைவன் தேவேந்த்ரன். பூர்வகா: என்றது முன்னே செல்லுகின்றவர்கள் என்பதைச் சொல்லும். எனவே தேவர்களுக்குத் தலைமை வஹித்து முன்னே சென்றவன் தேவேந்திரன் எனச் சொல்லியது.

शम्बर-तुल्य-मूर्ती — சம்பா - துல்ய - மூர்த்தீ - சம்பரன் ஓர் அஸுரன் - துல்ய - இணையாயுள்ள - ஸமானமாயுள்ள - மூர்த்தீ - சரீரங்கள் - ஆகவே - சண்டன், முண்டன் என்ற இவ்விரு அஸுரர்களும் சம்பராஸுரனைப் போன்ற வனப்பு மிக்க வடிவடைந்த சரீரங்களோடு விளங்கினர் எனச் சொல்லியது. சம்பரனுடைய வரலாறுகளைப் புராணங்களில் காணலாம். சண்டன், முண்டன் என்ற இவ்விருவருடைய வரலாறுகளையும் புராணங்களில் காணலாம்.

த்ரிதசா: — தேவர்கள். துர்மத: — கொடிய கொழுப்பு. சம்பர:—ஓர் அஸுரன், துல்ய:—நிகரான, மூர்த்தி:—உருவம் விசீர்ஷ:—அகற்றப் பெற்ற சென்னி. (6)

दौत्येन ते शिव इति प्रथितप्रभावो
देवोऽपि दानवपतेः सदनं जगाम ।
भूयोऽपि तस्य चरितं प्रथयांचकार
सा त्वं प्रसीद शिवदूति विजृम्भितं ते ॥ ७ ॥

प्रथित-प्रभाव:—புகழ் வாய்ந்த பெருமையையுடைய, शिव:—சிவன், इति - என்ற, देव:-अपि - தேவனும், ते-உன்னுடைய, दौत्येन - தூது செல்லுகின்ற காரியத்தின் தொடர்பினுல், दानवपते:- அஸுரர்களுக்குத் தலைவனுடைய, सदनम्- வீட்டை, जगाम - அடைந்தார். भूय:-अपि - மறுபடியும், हे शिवदूति— ஓ சிவதூதி ! ते-உன்னுடைய, विजृम्भितम्-மலர்ச்சியடைந்த, चरितम् — சரித்திரமானது, तेन - அவனுல், प्रथयां चकार-புகழ் வாய்ந்ததாகச் செய்யப் பெற்றதன்றே ! सा — அச்சிறப்பு வாய்ந்த, त्वम् - நீ, प्रसीद-அருள்வாயாக.

இச் செய்யுளில் புகழ்வாய்ந்த தனது நாயகனும் தாநவபதியினிடம் பரமசிவனைத் தூது அனுப்பிய நிகழ்ச்சி சொல்லப் பெறுகின்றது—

தௌத்யேந தே சிவ இதி ப்ரதிதப்ரபாவோ
தேவோऽபி தாநபவதே: ஸதநம் ஜகாம.
பூயோऽபி தேந சரிதம் ப்ரதயாம்சகார
ஸா த்வம் ப்ரஸீத சிவதூதி விஜ்ரும்பிதம் தே. (7)

மூவுலகிலும் புகழ்வாய்ந்த பெருமையையுடைய பரமசிவனும், உன்னுடைய கட்டளைக் கிணங்க, அஸுரர்களுடைய தலைவனும் ஸும்பனுடைய இல்லத்தை நோக்கித் தூது சென்றூர் அல்லவா? ஓ சிவதூதி ! உன்னுடைய சரிதம் அச்சிவனுல் மறுபடியும் புகழ்ச்சியடையுமாறு மலர்ந்ததன்றே! அச்சிறப்பு வாய்ந்த நீ எனக்கு அருள்வாயாக.

दानव-पति:—தாநவ-பதி: — தாநவர்: - அஸுரர்கள்-பதி:— தலைவன். அஸுரர்களுக்குத் தலைவன்.

शिव-दूती — சிவதூதீ - சிவ-சிவன். தூதீ - தூது அனுப்புவது. சிவனைத் தனது காரியத்தின் பொருட்டு அஸுரனிடத்தில் தூது அனுப்பிய காரணத்தால் சிவதூதீ என அன்னைக்கு பெயரும் தோன்றியது. "சிவதூத்யை நம்" என இப்பெயர் ஸ்ரீ லலிதாஸஹஸ்ரநாமத்திலும் காணப் பெறுகின்றது.

தௌத்யம்— தூது செல்லும் நிகழ்ச்சி, ப்ரதித-ப்ரபாவ:— புகழ்வாய்ந்த, பெருமை. தாநவபதி:- அஸுரர்களுக்குத் தலைவன், ஸதநம் — வீடு, இருப்பிடம், சரிதம் - வரலாறு, விஜிரும்பித:— விசேஷமாக மலர்ச்சியடைவது. (7)

चित्रं यदेतदमरैरपि ये न जेयाः
शस्त्राभिघातपतिताद् रुधिरादपर्णे ।
भूमौ बभूवुरमिताः प्रतिरक्तबीजा—
स्तेऽपि त्वयैव गिलिता गगने समस्ताः ॥ ८ ॥

हे अपर्णे— ஓ அபர்ணே ! பார்வதி ! यत्— யாதொன்று, अमरै:—अपि—தேவர்களினுலும்; ये—எவர்கள், न जेया:-வெற்றி கொள்ளமுடியவில்லையோ, एतत्- இதுவும், चित्रम्—வியப்பே

वदने[1]

யன்ரே ! शस्त्र-अभिघात-पतितात् - ஆயுதங்களினுல் அடிக்கப் பெற்று விழுந்த காரணத்தினுல் பெருகிய, रक्तात् - குருதியி லிருந்து, अमिता: — கணக்கற்றவர்களான, प्रति-रक्त-बीजा: — ஒவ்வொரு ரக்த பீஜனுகத் தோன்றிய, ते-अपि - அவர்களும், गगने - ஆகாயத்தில், त्वया-एव - உன்னுலேயே, गिलिता: - விழுங்கப் பெற்றனர் அன்ரே !

அமரர்களால் வெல்லமுடியாத ரக்தபீஜனை யழித்த வரலாறு இச்செய்யுளில் சொல்லப் பெறுகின்றது—

சித்ரம் யதேததமரைரபி யே ந ஜேயா :
சஸ்த்ராபிகாதபதிதாத் ருதிராதபர்ணே.
பூமௌ பபூவுரமிதா: ப்ரதிரக்தபீஜா-
ஸ்தேऽபி த்வயைவ கிலிதா ககநே ஸமஸ்தா: (8)

ஓ அபர்ணே ! எந்த ரக்த பீஜன், அமரர்களாலும் வெற்றிகொள்ள முடியாமல் ஆயுதங்களினுல் அடிக்கப்பட்டுக் கீழே விழுந்தாலும்: அவனுடைய குருதியிலிருந்து கணக் கற்ற ரக்தபீஜர்கள் தோன்றி, அவர்களை விரட்டிய பொழுது, நீ ஆகாயத்தில் நின்றுகொண்டு, அவர்கள் எல்லோரையும் கீழே விழாதவாறு விழுங்கினுய் அன்ரே ! அந்த இச்செய்கை யும் வியக்கத்தக்கதாயுள்ளது.

अपर्णा - அபர்ணு - नास्ति-पर्णम्- तपस्यायाम्-इति - நாஸ்தி-பர்ணம் - தபஸ்யாயாம் இதி தவம் செய்து கொண்டுள்ள நிலையில் இலையைக் கூடப் புசிக்காதவள் எவளோ, அவளே அபர்ணு - அல்லது இலையை மாத்திரம் புசித்துக் கொண்டு தவமியற்றியவள் எனவுமாம், இச்சொல் துர்க்கா தேவியைக் குறிப்பது. மஹாகவி காளிதாஸனும்—

"स्वयं विशीर्णद्रुमपर्णवृत्तिता
परा हि काष्ठा तपसस्तया पुन: ।
तदप्यपाकीर्णमत: प्रियंवदां
वदन्त्यपर्णेति च तां पुराविद: ।।"

''ஸ்வயம் வசீர்ணத்ருமபர்ணவ்ருத்திதா
பாரா ஹி காஷ்டா தபஸஸ்தயா புந:.
ததப்யபாகீர்ணமத: பரியம்வதாம்
வதந்த்யபர்ணேதி ச தாம் புராவித''

—இச் செய்யுளில், புராணங்களை யுணர்ந்த பழமையான பெரியோர்கள், பார்வதிக்கு அபர்ணு என்ற பெயர் தோன்றியதற்குக் காரணம் சொல்லுகின்றனர். மரங்களி லிருந்து தானே நழுவி விழுகின்ற இலைகளைப் புசித்து ஜீவித் திருப்பதன்ரே தவத்திற்குரிய உயர்ந்த கொள்கையெனச் சொல்லுகின்றனர்.

பார்வதியோ அந்த இலைகளைக் கூட புசிக்காது ஒதுக்கி விட்டுப் பரமசிவனைக் குறித்துத் தவமியற்றிய காரணத்தால் பிரியமான சொற்களைக் கொண்ட அவளை புராணங்களை யுணர்ந்துள்ள சான்ரேர்கள் அபர்ணு என அழைத்தனர் எனக் குமார ஸம்பவத்தில் சொல்லியுள்ளதையும், இந்த நாமாவின் பெருமையை ஸ்ரீலலிதாஸஹஸ்ரநாமத்தில் "அபர்ணுயை நம" எனச் சொல்லியுள்ளதையும் இங்கு கருத் தில் கொள்ளத்தக்கது.

சித்ரம்—வியப்பு, அபிகாத—அடிப்பது, அமித-கணக்கற்ற, கிலித—வழங்குவது, காஷ்டா-எல்லை, அபாகீர்ண-ஒதுக்குவது, புராவித:- பழமையான பண்டிதர்கள். (8)

आश्चर्यमेतदखिलं यदमू[1] सुरारी
त्रैलोक्यवैभवविलुण्ठनपुष्टपाणी ।
शस्त्रैर्निहत्य भुवि सुम्भनिसुम्भसंज्ञौ[2]
नीतौ त्वया जननि तावपि नाकलोकम्[3] ॥ ९ ॥

हे जननि—ஓ அன்னாய் ! त्रैलोक्य-वैभव-विलुण्ठन-पुष्ट-पाणी—மூவுலகங்களிலும் பெருகிய பெருமைகளில் நன்கு உழன்று கொண்டு வளர்ச்சியடைந்த கைகளை யுடையவர்களும், सुरारी—தேவர்களுக்குப் பகைவர்களாகவும், सुम्भ-निसुम्भ-संज्ञौ-ஸும்பன், நிஸும்பன் என்ற பெயர்களையுடையவர்களுமான, अमू-இவ்விருவரையும், शस्त्रैः- ஆயுதங்களினால், भुवि-நிலத்தில் निहत्य – வீழ்த்தி, तौ-अपि - அவ்விருவரையும், नाक-लोकम्—ஸ்வர்கலோகத்தைக் குறித்து, त्वया- உன்னால், नीतौ—அழைத்து செல்லப் பெற்றனர், यत्—என்பது யாதொன்று உண்டோ, एतत्- அந்த இச்செய்கை, आश्चर्यम्- வியக்கத் தக்கதாயிருக்கின்றதன்றோ !

இச்செய்யுளில் ஸும்பநிஸும்பர்களுடைய தோள் வலிமையை அழித்த வரலாறு சொல்லப் பெறுகின்றது—

[1] यदि मौ [2]दैत्यौ [3]नाकिलोकम्

ஆச்சர்யமேததகிலம் யதமூ ஸுராரீ
த்ரைலோக்யவைபவவிலுண்டந புஷ்டபாணீ.
சஸ்த்ரைர் நிஹத்ய புவி ஸும்பநிஸும்பஸம்ஜ்ஞௌ .
நீதௌ த்வயா ஜநநி தாவபி நாகலோகம். (9)

ஓ. அன்னாய் ! மூவுலகிலும் தனக்குக் கிடைத்த வெற்றியின் பெருமிதத்தினால் திளைத்துள்ள காரணமாக வளர்ச்சியடைந்த, தோள்வலிமையைக் கொண்டு உலகைத் துன்புறுத்தி வந்த அந்த ஸும்பன், நிஸும்பன் என்ற இருவர்களையும், உனது ஆயுதத்தினால் அவநியில் வீழ்த்தி, அப்பகைவர்களையும் ஸ்வர்கத்தை யடையச் செய்த காரணத்தால், இச்செய்கையும் வியப்பிற்குரியதாயமைந்துள்ளதன்றோ ! அதாவது பெருகிய மதத்தால் தோன்றிய தோள்வலிமையைப் பெற்று, அந்த ஸும்பன், நிஸும்பன் என்ற இருவரும் விளங்கினர் என்பது திரண்ட ஸாரம்.

மற்றும், அவ்விருவரையும் அவநியில் வீழ்த்தி, ஸ்வர்கத்தை யடையச் செய்ததும்: 'பகைவர்களுக்கும் கருணையைப் பொழிகின்ற உனது இவ்வுத்தமச் செயலும் வியக்கத்தக்கதாயுள்ளது என்பது தாத்பர்யம்.

இவ்விருவருடைய வரலாறுகளும், வஹ்நிபுராணம், வாமநபுராணம், மார்க்கண்டேயபுராணம் முதலியவைகளில் விரிவாகச் சொல்லப் பெற்றுள்ளன.

नाक-लोकम्—நாக:லோகம்— நாகம்-ஸ்வர்கம்-உலகம்.

Scanned by CamScanner

த்ரைலோக்ய-மூவுலகு. வைபவ- பெருமையின் சிறப்பு. விலுண்டாக - உழல்வது, சஸ்தர - ஆயுதம், அவநி - நிலம், பூமி.

त्वत्तेजसि प्रलयकालहुताशनेऽस्मिन्
यस्मिन् प्रयान्ति विलयं भुवनानि सद्यः ।
तस्मिन् निपत्य शलभा इव दानवेन्द्राः
भस्मीभवन्ति हि भवानि किमत्र चित्रम् ॥ १० ॥

प्रलय-काल-हुताशने — ஊழிக்காலத்தின் அக்நியென்னும், अस्मिन् — இந்த. त्वत्-तेजसि— உன்னுடைய ஒளிப் பிழம்பில், भुवनानि—பதினுன்கு உலகங்கள், सद्यः—அக்கணமே, यस्मिन्—எவ்விடத்தில், विलयम् — ஒடுக்கத்தை, प्रयान्ति — அடைகின்றனவோ, हे भवानि—ஓ அன்னாய் ! दानव-इन्द्राः— அஸுரத் தலைவர்கள், तस्मिन्—அந்த அக்நியில், निपत्य—விழுந்து, भस्मीभवन्ति-சாம்பராகின்றனர், हि-அன்றோ ! अत्र- இவ்விஷயத்தில், चित्रम् — வியப்பு, किम् ?— என்ன (வியப்பு இல்லையன்றோ)

இச்செய்யுளில் அன்னையின் திருமேனியிலே இலங்கும் பேரொளியை, ஊழித்தீயின் வலிமையோடு உருவகம் செய்யப் பெறுகின்றது—

த்வத்தேஜஸி ப்ரளயகாலஹுதாசநேऽஸ்மித்
யஸ்மிந் ப்ரயாந்தி விலயம் புவநாநி ஸத்ய:.
தஸ்மித் நிபத்ய சலபா இவ தாநவேந்த்ரா:
பஸ்மீ பவந்தி ஹி பவாநி கிமத்ர சித்ரம். (10)

ஓ பவாநி ! அன்னாய் ! ஊழியிலே தோன்றும் அனல் பிழம்பே போன்ற உன்னுடைய இந்த ஒளிப் பிழம்பில், அக்கணமே இந்தப் பதினுன்கு உலகங்களும் எந்த அனல் பிழம்பில் விசேஷமாயுள்ள ஒடுக்கத்தை அடைகின்றனவோ, அப்பெருமை வாய்ந்த அனல் பிழம்பில் அஸுர அரசர்கள் அனைவரும் விட்டில் பூச்சி போல ஒருவர்பின் ஒருவராக விழுந்து சாம்பராகின்றனர் அன்றோ ! இவ்விஷயத்தில் வியப்பு ஒன்றும் இல்லை.

भवानि - பவாநி - இச்சொல்லின் விரிவான விளக்கத்தை எமது பவாநீபுஜங்கஸ்தவத்தின் உரையில் காணலாம்.

प्रलय-काल-हुताशने - ப்ரளய-கால-ஹுதாசநே — ப்ரளயம்-ஊழி - காலம் - பொழுது, ஹுதாசநே - நெருப்பு-ஊழியிலே யாவும் ஒன்றுகத் திரண்டு பேரொளிப் பிழம்பாக ஒருங்கிணையும் நிலை, भुवनानि - புவநாநி - என்றது பதினுன்கு உலகங்களையும் குறிப்பாக உணர்த்தும், शलभाः - சலபா: - விட்டில் பூச்சிகள், இவை தோன்றினல் அரசர்களுக்குப் பீடையையுண்டு பண்ணும்.

இக்கருத்தை—

"अतिवृष्टिरनावृष्टिः शलभा मूषिकाः खगाः ।
प्रत्यासन्नाश्च राजानः षडेते ईतयः स्मृताः ॥"

"அதிவருஷ்டிரநாவருஷ்டி: சலபா முஷிகா: கதா:
ப்ரத்யாஸந்நா: ச ராஜாந: ஷடேதே ஈதய ஸம்ருதா:"

த்ரைலோக்ய-மூவுலகு. வைபவ- பெருமையின் சிறப்பு. விலுண்டந — உழல்வது, சஸ்தர - ஆயுதம், அவநி - நிலம், பூமி.

त्वत्तेजसि प्रलयकालहुताशनेऽस्मित्
यस्मिन् प्रयान्ति विलयं भुवनानि सद्यः ।
तस्मिन् निपत्य शलभा इव दानवेन्द्राः
भस्मीभवन्ति हि भवानि किमत्र चित्रम् ॥ १० ॥

प्रलय-काल-हुताशने — ஊழிக்காலத்தின் அக்நியென்னும், अस्मिन् — இந்த, त्वत्-तेजसि— உன்னுடைய ஒளிப் பிழம்பில், भुवनानि—பதினான்கு உலகங்கள், सद्यः—அக்கணமே, यस्मिन्— எவ்விடத்தில், विलयम् — ஒடுக்கத்தை, प्रयान्ति — அடைகின்றனவோ, हे भवानि—ஓ அன்னாய்! दानव-इन्द्रः— அஸுரத் தலைவர்கள், तस्मिन्—அந்த அக்நியில், निपत्य—விழுந்து, भस्मीभवन्ति-சாம்பராகின்றனர், हि-அன்றோ! अत्र- இவ்விஷயத்தில், चित्रम् — வியப்பு, किम् ?— என்ன (வியப்பு இல்லையன்றோ)

இச்செய்யுளில் அன்னையின் திருமேனியிலே இலங்கும் பேரொளியை, ஊழித்தீயின் வலிமையோடு உருவகம் செய்யப் பெறுகின்றது—

த்வத்தேஜஸி ப்ரளயகாலஹுதாசநேऽஸ்மித்
